# முரசொலி

ர இதழ்.

மு. கருணாநிதி

2 அணா

முரசு 2 | சென்னை | 30—12—55 | வெள்ளி | ஒலி 40


# அய்யோ; அவர் வரவில்லையே!

மலையாளப் பகுதிப் பிரயாணத்தை முடித்துக் கொண்டு இந்தியாவின் மாண்புமிக்கப் பிரதமர் நேரு வடநாடு திரும்பி விட்டார்!

கோவை வந்து தென்னிந்திய ஜவுளி ஆராய்ச்சிக் கூடத்திற்கு அஸ்திவாரக்கல் நாட்டினார்!

நகரசபை வரவேற்பில் நகைமுகம் காட்டினார்!

பிறகு காமராசருடன் கேரளக் கரைக்கு விரைந்திருக்கிறார்!

பாலக்காடு; கோழிக்கோடு மங்களூர்—இப்படியாக அவரது பிரயாணம் நீண்டிருக்கிறது!

மின்னல் வேக சுற்றுப் பயணமாம்—மித்திரன் தலைப்பு தருகிறது, இப்படி!

சென்ற இடங்களிலெல்லாம் அவர் வழக்கம் போல ஏக இந்திய கீதத்தைச் சுருதி குறையாமல் இசைத்திருக்கிறார்!

இந்தியா ஒன்றுதான்-கிளிப்பிள்ளையைப் போல் இந்த கோஷத்துக்கு உதட்டசைவு தருவதில அவருக்கு நிகர் அவரேதான்!

ஐந்து மண்டலப் பிரதேசம் பற்றிய விளக்கம்; கம்யூனிஸ்டுகளுக்கு சூடு — நேருவின் பேச்சு இந்தத் தலைப்புகளிலெல்லாம் புகுந்து சென்றிருக்கிறது!

ஆனால் ஒன்றே ஒன்றை மட்டும் மறந்துவிட்டார்!

சாவு வீட்டில் புகுந்துவிட்டு பிரேதத்தின் முக தரிசனத்தையும் பார்க்காமல், எப்படி நேர்ந்தது இந்த மரணம்—என்பதையும் கேட்காமல் சிரித்த முகத்தோடு சென்றிருக்கிறார்!

மயான பூமிக்கு வந்தவர் மாலை மரியாதைகளைப் பெறுவதில் மட்டுமே அக்கறை காட்டியிருக்கிறார்!

புயல்புகுந்து தென்னகத்தின் இதயம் போன்ற பகுதிகள் இருண்டு கிடக்கின்றன!

வெள்ளக் காட்டிலே வீழ்ந்து விட்டவர்பால் தென்னாட்டவர் உள்ளமெல்லாம் ஈர்ந்துச் செல்லப் பட்டிருக்கிறது!

மூலை முடுக்குகளிலிருந்தெல்லாம் நிவாரணத்துக்காக உள்ளன்பு கொண்டோர் போட்டியிடுகின்றனர்!

குதிரைப் பந்தய கூட்டம் கூட புயல் நிவாரணத்துக்காக உதவ முனவந்திருக்கிறது.

ஆனல் தமிழகம் புகுந்த இந்தியாவின் பிரதமரோ இது பற்றி ஒரு அனுதாப வார்த்தையை உதிர்த்தாரில்லை!

கோவைக்கு வந்து சென்றவருக்கு புயலால் தாக்குண்ட பிராந்தியங்களைப் பார்த்துச் செல்ல வேண்டும்; வீடிழந்து மாடிழந்து, ஆடையிழந்து, உயிர் மட்டும் இழக்காமல் சோகத்தின் ஏகப் பிரதிநிதிகளாய் விளங்கும் தமிழர்களுக்கு ஆறுதல் சொல்ல வேண்டும்—என்கிற எண்ணம் அணுவளவும் அவர் இதயத்தில் அரும்பிடக்காணோம்!

அண்டையிலேயிருக்கும்—அஸ்ஸாமில் வெள்ளமென்றதும், ஏதோ தன் வீட்டிலே வெள்ளம் புகுந்ததைப் போல் கருதி ஆகாய விமானம் ஏறி பார்வையிட்டவர் தென்னகம் வந்ததும், அங்கு தாக்குண்டு தவிக்கும் தரணியாண்ட இனத்தவரின் இழிநிலையைக் கண்டாரில்லை!

சென்ற டிசம்பர் 23-ம்தேதியன்று அமெரிக்காவின் ஒரு பகுதியிலே வெள்ளம் தோன்றி பன்னிருவர் மடிந்தபோது, நெஞ்சம் துணுக்குற்ற ஜனாதிபதி ஐசனஹோவர், 'அந்த வெள்ளத்தைப் பெரும் உத்பாதமாக விவரித்து நிவாரணத்துக்காக வேண்டியளவு பணம் செலவழிக்க அதிகாரமளித்திருப்பதாக'—மித்திரன் செய்தி தருகிறது!

பன்னிரண்டு பேர் மாண்டதற்கே அமெரிக்க ஜனாதிபதியின் உடலும், உள்ளமும் ஆடியிருக்கிறது!

இங்கோ மாண்டவர் தொகை ஆயிரத்தைத் தாண்டியிருக்கிறது!


ஏற்பட்ட சேதமோ பல கோடிகள்!

ஆனல் இங்குள்ள பிரதமரோ, வாய் திறக்கவில்லை, வந்து பார்க்கவில்லை!

இதுதான் ஏக இந்தியப் பண்பாட்டின் அறிகுறியா? பாரத புத்ரர்கள் அனைவரையும் சமமாகப் பாவிக்கும் 'சத்'காரியமா?

— 'ஜே' கோஷமெழுப்பும் மக்களே யோசியுங்கள்!

## புதிய சர்க்கஸ் காட்சி!



நேருவின் புதிய போசனையின 'ஐந்து மண்டலங்கள் பிரிவினை' இப்படித்தான் இருக்கிறது என்கிறார் பிரபல கேலிச் சித்திரக்காரர், சங்கர்!

[[illegible]]

Best copy available

# தமிழன் இல்லாத காரணம்!




அன்புள்ள குமார்,

வெள்ளக் கொடுமையால்—சூறையாடப்பட்ட சோழ மண்டலத்திலிருந்து எழுகின்ற சோகக் குரல், இன்னும் நம் செவிகளைத் தொட்டுக் கொண்டுதான் இருக்கிறது.

நாடே திடுக்கிடுமளவிற்கு தஞ்சைத்தரணியிலே ஏற்பட்டு விட்ட கொடுமையைக்குறித்து நல் இதயம் கொண்டோரெல்லாம் நேசக் கரம் நீட்டி — அவதிக்கு ஆளானோரின் அல்லல் துடைக்க முன்வருவதை நாளேடுகள் மூலம் நீ அறிந்திருப்பாய்.

சூறைக் காற்றால் சுகத்தை இழந்துவிட்டு வேதனை உருவங்களாகிக் கிடப்போரின் கண்ணீர் — கரையாத கல்நெஞ்சர்களைக் கூடக் கரையச் செய்திருக்கிறது.

திக்கெட்டிலுமிருந்து அனுதாபக் குரல்களும் — ஆறுதல் மொழிகளும் தஞ்சைத் தரணியை நோக்கி குவிந்த வண்ணம் இருக்கின்றன. வெள்ளத்தால் தாக்கப்பட்டோரின் வேதனையைப் போக்க, ஆங்காங்குள்ள திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களும், மாவட்ட செயலாளர்களும், நிதி திரட்டியும்—நேரிலே சென்று நிவாரண வேலைகளில் ஈடுபட்டு வருவதையும் நீ அறிவாய். அபயக் குரல் எழுப்புவோர்க்கு, ஆறுதல் அளிக்கும் இரக்க சிந்தை கொண்டோரை—அவர்கள் எந்த முகாமில் இருந்தாலும் நாம் பாராட்டி வருகிறோம். நமக்கே உரித்தான அந்த சிறந்த பண்பின் அடிப்படையிலேதான், வாடிக் கிடக்கும் மக்களுக்கு வாழ்வளிக்கின்ற நற்பணியிலே இறங்கி இருக்கும் காமராசரையும் பாராட்டுகிறோம்.

தத்தளிப்பிற்கு ஆளானோரின் கண்ணீர், கடல்கடந்தோர் நெஞ்சங்களிலெல்லாம் கொந்தளிப்பையும்—கொந்தளிப்பையும்—குமுறலையும் உண்டாக்கி இருக்கிறது.

சென்ற முறை நம் சோதரர்கள் நாசத்திற்கு ஆளாகி அழுதுகொண்டிருந்தபோது—திருவாங்கூர் பகுதிகளில் ஜலக்கிரீடை' செய்துகொண்டிருந்த நேரு பண்டிதர்கூட இந்த முறை புயல் நிவாரணத்திற்கென, ஒதுக்கப்பட்டிருந்த பணத்திலிருந்து ஒரு தொகையை கொடுத்திருக்கிறார்.

இதற்கிடையிலேதான் நான் குறிப்பிட்டிருந்தேன்; வடக்கிலே இப்படி ஏதாவது ஒரு குமுறல் ஏற்பட்டால், பாதிக்கப்பட்டோரின் நிவாரணத்திற்காக சமுதாயத்திலே இருந்து நிதி திரட்டி அனுப்பவேண்டி இருக்கிறது. ஆனால் தெற்கிலே கொந்தளிப்பு என்றால் வடநாட்டு மனிதர்கள்—குறிப்பாக டில்லி சர்க்கார் ஏறெடுத்தும் பார்ப்பதில்லை என்று!

பண்டிதரிடமிருந்து ஒரு லட்ச ரூபாய் நிவாரணத்திற்கென வந்தவுடன்—இங்குள்ள தேசியத் தோழர்கள், நேரு பண்டிதரே நிதியனுப்புகிறார் என்று 'ஏ'காரம் போட்டுப் பேசினர்.

அதோடு மட்டுமல்ல வடக்கு தெற்கை புறக்கணிக்கிறது என்று கண்டனம் கிளப்பினீர்களே-இதோ இதற்கென்ன சொல்கிறீர்-தெற்கிலே அவதி என்றதும் வடக்கு வாரிக் கொடுக்கிறதே' என்றும் சுட்டிக் காட்டினர். நீயும் அப்படித்தான் கருதியிருக்கக் கூடும்.

குமார்! வாழ்விழந்தோரின் கண்ணீரைத்துடைக்க வடக்கு வழங்கிற்றே, அந்தப் பணம்; வீடுவீடாகச் சென்று—வீதிக்கு வீதி நுழைந்து, நாம் நிதி திரட்டுகிறோமே-அந்த முறையிலே சேகரித்து அனுப்பப்பட்டதல்ல; சர்க்காரின் பணம்! நிவாரணத்திற்கென ஏற்கெனவே ஒதுக்கி வைக்கப்பட்டிருந்த பணம்! அதிலே நாம் கொட்டித் தந்த வரிப்பணமும் ஒட்டிக்கொண்டுதான் இருக்கிறது.

'வடக்கே அமைந்திருக்கின்ற சர்க்கார் பாதிக்கப்பட்டோருக்கு பண உதவி தருகிறதென்றால்— அது கருணையுமல்ல- கனிவுமாகாது-கடமை' என்று அறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டதைப் போல, டில்லி சர்க்காரின் இந்த உதவியை —கடமை என்று குறிப்பிடுவதைத் தவிர வேறென்ன கூறமுடியும்.

கொடுமை மிகுந்த சூழ்நிலையிலே சிக்கிச் சீரழியும் மக்களின் கண்ணீர் குறித்து, வடநாட்டு சர்க்கார் எந்த அளவிற்கு அலட்சிய மனப்பான்மையுடன் இருந்து வருகிறது தெரியுமா?

தென்பகுதியின் துயர்குறித்து நாம் எதிர்பாராத இடங்களிலிருந்தெல்லாம் இரக்கம் சுரக்கின்ற இந்த நேரத்தில், புயல் செய்திகளுக்கு இருட்டடிப்பு செய்தனராம்! யார் அந்த இரும்பு நெஞ்சர்கள் என்று நீ கேட்பதற்கு முன்பாகவே நான் கூறிவிடுகிறேன். சிங்கப்பூரிலே இருக்கும் இந்திய அதிகாரிகள்தான் அந்த இரக்கமற்ற செயலை செய்திருக்கின்றனர்.

சிங்கப்பூரில் இருக்கும் இந்திய சர்க்கார் காரியாலயத்தினர் புயல் பற்றிய செய்தியையே அறிவிக்கவில்லையாம்!

இந்த காரியாலயத்திற்கு டில்லியிலிருந்து செய்திகளை அனுப்பும் அதிகாரிகள் தென்னகத்து புயல் கொடுமை பற்றிய செய்தியை அனுப்பவில்லையாம்.

டில்லியிலிருந்து டிசம்பர் 13 ம் தேதி. சிங்கை கமிஷனர் காரியாலயத்திற்கு அனுப்பப்பட்ட அறிக்கையில்—சவூதி அரேபிய மன்னரின் வருகை, சமுதாய நலதிட்டத்தை சோவியத் தலைவர்கள் பார்வையிட்ட செய்தி, சீனி-கருப்பங்கட்டி—எண்ணெய் முதலிய பொருள்களைப்பற்றிய வர்த்தகச்செய்தி; இப்படிப்பட்ட செய்திகள் தான் அந்த அறிக்கையில் இடம் பெற்றதாம். இந்த செய்திகள் அனைத்தும் பயனற்றவைகள் என்று நான் குறிப்பிடவில்லை; தெற்குமுனையின் அழுகுரலும் பாதிக்கப்பட்டு தவித்துக் கொண்டிருக்கும் மக்களின் குமுறலும்-டில்லியில் கொலுவீற்றிருக்கும்'குணாளர்'களுக்கு தெரியாமல் போய் விட்டது ஏன்?

மலேயாவில் வாழும் மக்களில் பெரும்பாலோர் — தற்போது புயலால் பாதிக்கப்பட்டிருக்கும் பகுதியிலிருந்து சென்றவர்கள்தான்—அந்த சோதரர்களுக்கு இந்திய சர்க்கார் காரியாலயத்தினரின் அலட்சிய மனப்பான்மை-எந்த அளவிற்கு வேதனையைத் தந்திருக்கும் என்று நான் குறிப்பிடத் தேவையில்லை.

குமார்! வடநாட்டு மனிதர்கள் தென்னகத்தைப் புறக்கணிக்கிறார்கள் என்று நாம் மட்டுமே குரல் எழுப்பி வருவதாக இதுவரை கருதிக் கொண்டிருந்தாயல்லவா?

'சிங்கப்பூரில் இந்தியாவின் தூதுவராக இருப்பவர் ஒருவடநாட்டுக்காரர் என்பதால்தான்-தமிழகத்தில் ஏற்பட்ட புயல் பற்றிய செய்தியை இருட்டடிப்பு செய்துவிட்டனர்!

சிங்கப்பூரில் பிரபல வழக்கறிஞராக' இருக்கும் தோழர் ரமணி அவர்கள் எழுப்பிய கண்டனக் குரல்தான் மேலே தரப்பட்டிருப்பது. இதற்கு பொருள் என்ன? பதில்கூற வேண்டாம்; சிந்தித்துப் பார்!

அன்புள்ள,
பொன்முடி

29-1-56 ல் சிதம்பரத்தில்
திராவிட முன்னேற்ற கழகப்
பொதுக்குழு
கூடுகிறது

-தி. மு. க. தலைமை நிலையம்.

# தலையங்கம்

காதலிலே கவிதையிலே களம் போதும் பேச்சு;
கணவனுக்கும் மனைவிக்கும் திராவிடமே மூச்சு!

சென்னை 30—12—55 வெள்ளி


## ஏகாதிபத்ய அமைப்புகள்

வட அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பு (நாட்டோ); தென் கிழக்கு ஆசிய ஒப்பந்த அமைப்பு (சீட்டோ)—போன்ற சிருஷ்டிகள் மூலம் அமெரிக்க ஏகாதிபத்யம் வளர்ந்துவரும் ரஷ்ய ஆதிக்கத்தைத் தடுத்து நிறுத்த முயற்சிப்பதுபோல,இங்கும் தென்னகத்தின் விடுதலை இயக்கத்தின் விசையனைத்தையும் ஒடுக்க வடநாட்டு ஏகாதிபத்யம் புதிய அமைப்புகளைத் தேடி அலைகிறது.

புதுப்புது மண்டலங்களை அமைக்கப் போகிறார்களாம்! மத்ய—கிழக்கு—மேற்கு — தெற்கு — என்று பெயரிடப்படும் ஒவ்வொரு மண்டலத்தின் கீழும் பல மாகாணங்கள் ஒப்படைக்கப் படுமாம்.

—இதுதான் நேருவின் புதிய யோசனை!

இதை, வழக்கம்போல் பொதுமக்கள் விருப்பத்தைக் கேட்காமல் அரங்கேற்றக் கூடாது என்பதற்காக ஒத்திகைப்படியே சிறியதோர் நாடகமும் நடத்தியிருக்கிறார்கள்.

தனிப்பட்ட கருத்து—என்று நேரு யோசனை சொல்ல; உடனடியாக பந்த் இந்த யோசனைகளை அமுலாக்கும் வழிவகைகளைக் கூற பின் எல்லோருமாகச் சேர்ந்து பார்லிமென்டை ஒத்திவைத்திருக்கிறார்கள்.

'தட்சிணப்பிரதேசம்' என்னும் வாலறுந்த நரியின் பிரேதம் முழுதும் எரிந்து அடங்குவதற்குள்ளாகவே, வடநாட்டு நரிகள் அவசர அவசரமாக ஐந்து மண்டல யோசனையைத் தயாரித்திருக்கிறார்கள். ஒவ்வொரு மண்டலத்திற்கும் ஒரு ஹைகோர்ட்; ஒரு கவர்னர்—என்கிற அளவுக்கு இந்த யோசனை 'விசுவ ரூபமும்'-எடுத்திருக்கிறது!

இப்போது வர்ணிக்கப்படும் விதப்படி பார்க்கப் போனால் இந்த மண்டலங்கள் பொருளாதார முன்னேற்றம்—என்ற கருத்தினை அடிப்படையாகக் கொண்டு எழுப்பப் பட்டிருக்கின்றன. நான்கைந்து மாகாணங்களுக்குச் சேர்ந்தாற்போல் திட்டம் வகுக்கும் பணியினைத் தான் இவைகளிடம் ஒப்படைக்கப்போகிறார்கள்.

இந்தத் திட்டங்களை அமுல் நடத்தும் அதிகாரம் தினையளவும் இவைகளுக்குக் கிடையாது.

—நேருவின் இந்த யோசனையில் புதுமை ஏதுமிருப்பதாக நமக்குப் புலப்படவில்லை!

இப்போது மட்டுமென்ன ஒன்றுக்கு மேற்பட்ட மாகாணங்கள் கூடிக் கலந்து பொதுவான திட்டங்கள் பற்றி முடிவு செய்யாமலா இருக்கின்றன?

வட எல்லைப் பகுதிகள் குறித்து ஆந்திர அமைச்சர்களும், சென்னை அமைச்சர்களும் மண்டலங்களின் உதவி ஏதுமின்றியே ஆலோசனை நடத்துகிறார்களே!

தண்ணீர் விஷயமாக திருவாங்கூர்—கொச்சியுடன், சென்னை எண்ணங்களைப் பரிமாறிக் கொண்டபோது நேரு சொல்லிய மண்டலங்கள் மண்ணுக்கடியிலல்லவா புதையுண்டு கிடந்தன? இப்போது மட்டும் ஏன் அவை எழுந்து நச்சுத் தலை விரித்து நர்த்தனமாடுகின்றன?

இந்த ஐயவினாவுக்குப் பதில் காணும் நேரத்திலேதான் 'நாட்டோ'—'சீட்டோ' போன்ற ஏகாதிபத்ய மண்டலங்களோடு நேருவின் 'மண்டலங்களை'யும் ஒப்பிட வேண்டியவர்களாகிறோம்!

இந்த யோசனையின் ஒவ்வொரு அணுவிலும் புதுமை மணம் கமழக் காணோம். இருந்தாலும் 'இதில் என்னவோ இருக்கிறது'-என்று ஆரவாரம் எழுப்பிக் கொண்டு, செயல்படுத்த முனைவது வேடிக்கையாகவே இருக்கிறது!

மதுரை நாள் ஏடு 'தமிழ் நாடு' பத்திரிகைகூட தலையங்கம் தீட்டியிருந்தது: அதில்,"...திராவிடநாடு இயக்கம் ஆரம்பித்த காலத்திலிருந்தே இந்த யோசனை நம் தென்னாட்டிலிருந்து வருகிறது. தமிழோடு இயைந்த மொழிவழி நாடுகளை ஒன்றாக இணைத்து ஒரு நாட்டை உவாக்க வேண்டுமென்பதுதான் அவர்கள் கண்ட கனவு—" என்று குறிப்பிடத்தக்க அளவுக்கு பழமையின் சாயல் தெரிகிறது.

ஆனால் தமிழ்நாடு இதழ் நம்முடைய 'கனவு'தனை நேருவின் மண்டலங்களோடு ஒப்பிட்டிருப்பது சற்றும் பொருந்த முடையதாகத் தெரியவில்லை. நாம் கேட்கும் திராவிடக் கூட்டாட்சியும், நேருவின் அதிகாரமில்லாத வெறும் யோசனை வழங்கும் மண்டலங்களும் மலையும் மடுவும் போன்றவை!

ஆனால் இந்த மடுவை வைத்துக் கொண்டே மலையென வளர்ந்து வரும் நம்முடைய பிரிவினை இயக்கத்தைக் கவிழ்த்துவிடப் பார்க்கும் சூழ்ச்சி, டெல்லி வட்டாரத்தில் உதயமாவதைப் பார்க்கும்போது தான் தென்னகம் வாழ்வோர் தணல் வீழ் மெழுகென உள்ளம் நெகிழ வேண்டியவர்களாகிறார்கள்.

நாளை—மண்டலங்களைப் படைத்துவிட்டு, அங்கே வழங்க வேண்டிய அலுவலக மொழி இந்தியாகத்தான் இருக்க வேண்டுமென—உத்தரவு விரைந்து வரலாம்!

பல மாநிலங்கள் நிறைந்த ஒரு மண்டலத்துக்கென உருவாகப் போகும் உயர்நீதி மன்றத்தில் இந்தி மொழிக்குத்தான் மகுடமென்று டெல்லி ஆணையிடலாம்!

—இது போன்ற சந்தேகங்கள் அடுக்கடுக்காக உதயமாகின்றன, பத்தாம் பசலிபோல் தோன்றும் பழைய மண்டலங்களை நேரு-பந்த் குழுவினர் கட்டியழுவதைக் காணும்போது!

அடங்காத வீறுபெற்று விடுதலை முரசத்தை அறையப் போகும் நம் கரங்களைக் கட்டிப் போடப் பார்க்கிறார்கள், களம் பல கண்டு, நிலம் பல ஆண்ட நாம், தலை வணங்காப் பரம்பரையென்பதை உணராதார்!

கண்ணியம் காப்போம்; ஆனால் கடமைக் கொம்பு ஒலித்து விட்டால் கடலலைபோல் குமுறியெழுந்து குள்ளநரிப் பண்புடையோர் விரித்திருக்கும் ஏகாதிபத்ய வலைகளை விழுங்கிடத் தயங்கோம்! இதைத்தான் நம் அடக்கத்தை ஆமை நிலையெனக் கருதுவோருக்கு எச்சரிக்க விரும்புகிறோம்!

★

## பட்டப் பெயர்கள்!

★

"ஜாதி ஒழிய வேண்டுமென்றால் பெயர்களுக்குப் பின்னால் சாதிப் பட்டங்கள் கூடாது; இவ்விதம் குறிப்பிடுவதைத் தடைசெய்ய சட்டம் கொண்டுவர வேண்டும்"

(—பட்டாபி சீதாராமையா பேச்சு)

"ராஜகோபாலாச்சாரி—என்று கொட்டை எழுத்துக்களில் கையெழுத்துப் போடும் இந்தியாவின் மாஜி கவர்னர் ஜெனரலாகிய என் போன்றோரை தாக்குவதற்குத்தான் சீதாராமையா இப்படிப் பேசுகிறார்!"

(—ஆச்சாரியார்)

★ 9-ம் பக்கத் தொடர்ச்சி

பதவிகளை ஏற்பதும் தீவிர சேவை செய்வதும் நல்ல காரியங்களே. ஆனால் மேற்கண்ட பணிகளைவிடச்சிறந்ததாக என் அனுபவத்தில் நான் கண்டது என்னவென்றால், அப்பணிகளைத் துறந்துவிட்டு, நம்நாட்டு மகரிஷிகளைப்போல வாழ்ந்து, அவர்கள் இன்றைய மக்களோடு மீண்டும் உறவாடுவதற்கு வேண்டிய காரியத்தை செய்வதேயாகும்''

டிசம்பர் 25-ம் தேதி 'கல்கி' ஏட்டில் மேலே தரப்பட்டுள்ள ஆச்சாரியாரின் கருத்து வெளியாகி இருக்கிறது.

அரசியல் தொண்டும் - தேசநன்மைகளுக்கான அரசியல் பதவிகளும்-தீவிர சேவையும் நல்லவைகள்தானும்! ஆனல்—

அரசியல் சிக்கலில் இருந்து விடுபட்டு- காவி,—கமண்டலம் சகிதமாக-கனியேனும், காயேனும், உதிர்சருகேனும், கந்தமூலங்களேனும்,—கிடைத்ததாவதொன்றை உண்டு, பர்ணசாலைகளிலே-பசுமரச் சோலைகளிலே—உலவிக் கொண்டிருந்த முனிபுங்கவர்களின் அடிச்சுவட்டை. பின்பற்றுவது அதைவிட நல்லதாம்!

ஆச்சாரியாருக்கு இந்த 'ஞானோதயம்' எப்பொழுது உண்டாகி இருக்கிறது பாருங்கள்!

வேதபாராயணம் ஓதுவதை விட்டுவிட்டு—பூசுர வேஷத்தை உதறித்தள்ளி — புதுக்கோலத்தோடு அரசியலில் புகுந்து; வெள்ளையன் உட்கார்ந்திருந்த 'வெல்வெட்' நாற்காலியை எட்டிப் பிடித்து, கவர்னர் ஜெனரலாகி—பதவித் தேனை சுவைத்து அதை விட மனமில்லாமல், படிப்படியாக இறங்கி—'காமராசரின் புண்யத்தால்' பதவியிலிருந்து விரட்டப்பட்டு 'கல்கியை' புகலிடமாக்கிக்கொண்ட பிறகுதான், ஆச்சாரியாருக்கு இந்த தெளிவு ஏற்பட்டிருக்கிறது பதவிப் பித்தை வெறுத்து-அதற்கொரு விளக்கமும் கூறியிருகிருர்,

ஆச்சாரியாரின் இன்றைய துறவு கோலம்' அவராகவே ஏற்றுக் கொண்டதல்ல; வேறு வழியில்லை என்ற நிலை ஏற்பட்ட பிறகு, அரசியல் நாற்காலியும் காலியில்லை என்று தெரிந்து கொண்ட பிறகு, ஏற்பட்ட பரிதாபகரமான நிலை! எனவே 'வேண்டாம் அந்தப் பழம்—வாயெல்லாம் புளிக்கும்' என்ற குள்ளநரி வேதாந்தத்தைப் பேசியிருக்கிருர்.

அவருக்கே உரித்தான இத்தகைய 'சருக்கு' வாதங்களைப் பற்றிக்கூட நமக்குக் கவலையில்லை; 'நம் நாட்டு மகரிஷிகளைப்போல வாழ்ந்து அவர்கள் இன்றைய மக்களோடு மீண்டும் உறவாடுவதற்கு வழி செய்ய வேண்டும்' என்ற வாசகங்கள் தான் நமக்கு அவரிடமுள்ள மதிப்பை குறைத்து விடுகிறது.

ஆச்சாரியாரின் இந்த கருத்துக்கு நாம் மறுப்பளிக்க விரும்பவில்லை.

★

''எளிய வாழ்க்கை முறையை 'இந்து மதம்' ஆதரிப்பதாகச் சொல்வதெல்லாம் புரட்டு என்பதே என் அபிப்பிராயம், முனிபுங்கவர்களைப் போல எளிய வாழ்க்கையை நடத்த மக்களைத் தூண்டுவது ஒப்புக் கொள்ள முடியாத ஒன்ருகும்; செல்வத்தைப் பெருக்கி சீராக வினியோகிக்க வேண்டுமென்று நாம் முயற்சித்துக் கொண்டிருக்கும்போது, தவசிரேஷ்டர்களின்பாணியிலே எளிமையை ஏற்பதாக நடித்து, வறுமையை வளர்ப்பது, போலிக் கொள்கை என்பது மட்டுமல்ல-தேச விரோதமான செயலென்றும் நான் குறிப்பிடுவேன்.

மகரிஷிகள் என்று சொல்லப் பட்டவர்கள், எளிமையாகவும்-தூய்மையாகவும் வாழ்ந்தார்கள் என்று சொல்வதெல்லாம் வெறும் பொய்! சரித்திர பூர்வமான சான்றுகள் இதை அங்கீகரிக்கவில்லை; எனவே மகரிஷிகளின் அடிப்படையிலே வாழ்க்கையை நடத்தவேண்டும் என்று இந்தக் காலத்திலும் உபதேசிப்பது விசித்திரமான செயல் என்று கருதுகிறேன்.

மனு சட்டப்படி மக்கள் இப்பொழுது வாழவில்லை: அவர்களின் வாழ்க்கை மேற்கத்திய கல்வி முறையை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது

புராதன காலத்தில் மகரிஷிகள் என்று சொல்லப் பட்டவர்கள், ஆடம்பரமாகவும், படாடோபமாகவும், போக வாழ்வு நடத்தி இருக்கின்றனர். துறவிக்கே எடுத்துக் காட்டாகக் கூறப்படும் சப்தரிஷிகள் கூட 'முத்துக்களால் ஆன' பூனூலைத்தான் அணிந்து வாழ்ந்தனர். இந்துக் கடவுள்களும்—அவர்தம் காதலியரும் பட்டையும்-பளபளப்பான ஆபரணங்களையும்தான் அணிந்துகொண்டு இருக்கின்றனர், ஆகவே எளிய முறையில் 'ரிஷி' வாழ்க்கை நடத்தும்படி மக்களுக்கு உபதேசிப்பது-வறுமையை வலிந்து மக்களை ஏற்றுக் கொள்ளும் படிச் செய்வதாகும்; வெகு காலத்திற்கு முன் இந்துமதம் உபதேசித்த கருத்துக்களை இன்று நாடு ஏற்றுக் கொள்ளத் தயாராய் இல்லை'' மேலே தரப்பட்டுள்ள கருத்துக்கள் நம்முடையதல்ல; 24-ந் தேதி விஸ்வபாரதி சர்வகலாசாலை பட்டமளிப்பு விழாவில் சர்தார் கே. எம். பணிக்கர் நிகழ்த்திய சொற்பொழிவின் சுருக்கம்.

'பொதுப் பணியைத் துறந்து நம் நாட்டு மகரிஷிகளைப் போல எளிமையாக வாழ்ந்து அவர்கள் பரப்பிய கொள்கைகளோடு உறவாட வேண்டும்' என்ற ஆச்சாரியாரின் தேச விரோதமான செயலுக்கு (பணிக்கரின் பாணியில்) இந்த கருத்துக்களே சிறந்த மறுப்பாக அமைந்திருக்கின்றன! ★




வாங்கிவிட்டீர்களா?

"பெரு நாள் மலர்"

மலேயா நாட்டில் வாழும் தமிழர்களின் திருநாளாகிய பெருநாள் விழாவின்' சிறப்பு மலர் கண்ணைக்கவரும் வண்ணப் படங்கள். கருத்திற்கினிய, கவிதை, கட்டுரை, கதை ஏராளம்! மலேயா, பர்மா, இந்தியா, இலங்கை, இந்தோனேஷியா, சைகோன், முதலிய நாடுகளின் தலைசிறந்த எழுத்தாளர்களின் கருத்தோவியங்கள்! சகல நாடுகளிலும் தைமீ முதல் வாரத்தில் விற்பனைக்கு வருகிறது!

மலரினுள்:—மலேயா தமிழர் தலைவர் திரு கோ. சாரங்கபாணி, ரங்கூன் மகமட் காசிம், மைடான் டரு. இராசேந்திரன், சைகோன் கமலநாதன், கண்டி வீ. குமாரசாமி. தமிழ் நாட்டின் எழுத்தாளர்களான:— சி. என். அண்ணுத்துரை, இரா. நெடுஞ்செழியன், கி. வா. ஜெகநாதன், எம். கே. சண்முகம், ம. பெ. தூரன், இராதாமணுளன், கண்ணதாசன், கா. மு. ஷெரிப், எஸ். எஸ். தென்னரசு, பாரதிதாசன், என். எஸ். கிருஷ்ணன், சகஸ்ரநாமம், ப. நீலகண்டன், எஸ். பாலச்சந்தர், கே. ஏ. தங்கவேலு. டி. என். சிவதாணு, எஸ். முத்துச்செழியன், எஸ். மாரிமுத்து, தி. ரா. சீனிவாசன், கே. சங்கர், ஆர். நாகேந்திரராவ், ஆர். எஸ். மனேகர் முதலியோரின் கருத்தோவியங்களும், புகைப் படங்களும் இடம் பெறுகின்றன.

வியாபாரிகளுக்குத் தக்க கமிஷன் உண்டு. உடனே கீழ் கண்ட முகவரிக்கு விண்ணப்பியுங்கள்:—

மானேஜர்,
'பெருநாள் மலர்' (டெ. 761.)
10, ஏ. அஸ்ஸாம் கும்பாங்ரோடு,
தைப்பிங் (மலேயா)

இந்தியா விலை ரூ. 1.
மலேயா 65 காசு.

தமிழர் திருநாளில்
வெளிவருகிறது!

★ அன்பன் ★

வார இதழ் :: இரண்டணு

சினிமா, அரசியல், சமூக பகுதிகளுடன் திடுக்கிடும் திதிக்கும் செய்திகளைத் தாங்கி உங்களை மகிழ்ச்சியூட்டும் அறிவியக்க ஏடு.

ஏஜண்டுகள் தேவை

நிர்வாகி, "அன்பன்"
12-10-ஏ, செண்பவனத் தெரு
பாளையங்கோட்டை. (நெல்லை)

(வண்ணை)
கே. எஸ். பாண்டியன்
படிப்பக நூல் நிலைய
நிதிக்காக
7—1—56
சனி மாலை 6-மணிக்கு
சென்னை சௌந்தரியமகாலில்
மு. கருணநிதி
அவர்கள் தலைமையில்
தமிழ், இசை இளைஞர்
கலா மன்றத்தார் அளிக்கும்
ஆசைதங்கை
சமூக சீர்திருத்த
நாடகம் நடைபெறும்
டிக்கெட் விபரம்:
ரூ. 5, 3, 2, 1.

# 'கருப்பு நிலா'

ஏ. கே. வில்வம்.

அன்று கடற்கரையிலே குமரவேலன் சொற்பொழிவாற்றப் போகிறான் என்ற செய்தியை நகரமெங்கும் சுவரொட்டிகள் பறைசாற்றிக் கொண்டிருந்தன. ஆர்ப்பரிக்கும் அலைகடலின் அளவை அங்கே திரண்டு வழிந்த மக்கள் வெள்ளம் குறைத்துவிட்டது. விநாடிக்கு விநாடி லட்சக் கணக்கான விழிகள்-அந்த லட்சியவாதியின் வருகைக்காக ஏங்கிக்கொண்டிருந்தன. 'குமரவேலன் வாழ்க' கூட்டத்தின் ஒரு பகுதியிலிருந்து இப்படி திடீரென்று ஒரு குரல் கிளம்பும்-கொஞ்ச நேரத்திற்கெல்லாம் அந்த குரலெழுப்பிகளின் விழிகளிலே ஏமாற்றம் நிழலாடும்; இப்படிப் பல முறை மேடையை நோக்கிவரும் வேறு மனிதர்களைப் பார்த்துவிட்டு 'குமரவேலர் வந்துவிட்டார்' என்று கூட்டத்தினர் ஏமாந்துகொண்டிருந்தனர்.

★

'நான் திரும்புவதற்கு இரவு பத்து மணியாகிவிடும்—எனக்காக நீங்கள் காத்திருக்க வேண்டாம்-சாப்பிட்டுவிட்டு படுத்துக்கொள்ளுங்கள், நான் கூட்டத்திற்குப் போகிறேன்.'—என்று கூறி குமரவேலன் தன் தாயிடம் விடைகேட்டபோது அவள் கண்களில் நீர் பெருக்கெடுத்தது.

'அப்பா குமரா நீ அதிகம் படித்தவன்-உனக்கு நான் என்ன சொல்லப் போகிறேன்; உடம்பை கவனித்துக் கொள். ஊர் வேலை என்று புறப்பட்டு நாளுக்கு நாள் உன் உடல் இளைத்துக்கொண்டு வருவதை என்னால் தாங்க முடியவில்லையடா' இதைக் கூறும்போது அவள் வாய்விட்டு அழுதே விட்டாள். தாயின் பாசத்தைக் குறித்து ஒரு கணம் அசைவற்று நின்றான் குமரவேலன். தன் தாயை அன்புடன் அணைத்து ஒரு ஆசனத்தில் அமரச் செய்து-'நான் செய்கிற இந்தத் தொண்டு அவ்வளவு பெரிதல்லவே—எத்தனையோ உலக அறிஞர்கள் ஊர் நன்மைக்காக உயிரையே தியாகம் செய்திருக்கிறார்களே அம்மா!' என்று அன்போடு கூறினான் குமரவேலன்.

இதைக் கேட்டவுடன் அந்த அன்புத் திருவுருவம் கண்களில் தேங்கியிருந்த கண்ணீரை துடைத்துக் கொண்டு 'குமார் போய்வா-சீக்கிரம்வந்துவிடு-பனி உன் உடம்பிற்கு ஆகாது' என்று விடைகொடுத்தனுப்பினாள்.

★

அன்று மாலை!

கருத்தலைகள் — கடலலையோடு மோதிற்று. கற்கண்டு சுவை பெற்று சொற்கூட்டங்கள் புரண்டன; சேர்ந்திருந்த மக்களின் இதயங்களில் உணர்ச்சி அலைகள் கூத்தாடின. 'இங்கென் நாட்டில் இழிகழுதை ஆட்சியேன்?' என்று குமரவேலன் இடிக்குரல் எழுப்பியபோது 'கூடாது! கூடாது!' என்று கூட்டத்தினர் எழுப்பிய பேரொலி-உறுமிக் கொண்டிருந்த அலைகடலை ஊமையாக்கிற்று. கூட்டம் மக்களின் எழுச்சி வாழ்த்துக்களோடு முடிவடைந்தது; குமரவேலன் வீடுதிரும்ப இரவு நெடுநேரமாயிற்று.

இரண்டு நாட்களுக்குப் பிறகு குமரவேலனுக்கு ஒரு கடிதம் வந்தது.

விடுதலை வீரரே! கன்னல் சாறும் கனிரசக் குழம்பும்தான் உங்கள் எழுத்துக்களில் மிதக்கின்றன என்று கருதிக் கொண்டிருந்த என் முடிவை-நேற்று உங்கள் கடற்கரைப் பேச்சு பொய்யாக்கி விட்டது. சொல்லுக்குச் சொல் எழுச்சிப்புரசம்! எரிமலையின் வேகம்...இப்படிவர்ணித்துக் கொண்டே போனால் நான் சொல்ல வந்ததை மறந்து விடுவேன் போலிருக்கிறது லட்சிய வீரரே! அடுத்த வாரம் எங்கள் கல்லூரியின் ஆண்டுவிழா—அதை முன்னிட்டு 'விடியுமா?' என்ற ஒரு நாடகம்-நடத்தப் போகிறோம். புரட்சிக் கருத்துக்களை பின்னணியாக கொண்டதுதான் அந்த நாடகம். நாடகத்திற்கு உங்களையே தலைமை வகிக்கும்படி வேண்டுகிறேன்: என் முடிவுதான் நாடகக் குழுவினரின் ஏகோபித்த எண்ணமும்: இதோடு இணைத்திருக்கும் அஞ்சல் உறையில் உடனே உங்கள் சம்மதத்தை அறிவிக்க வேண்டுகிறேன்.

அன்புள்ள,
இந்திரா
நாடகக்குழு தலைவி

இந்த கடிதத்தைப் படித்து முடித்ததும்—குமரவேலனின் சிந்தனையில் பலப் பல எண்ணங்கள் குதித்துக் கொண்டுவந்தன; கடிதத்தை மடித்து மேஜையறையில் வைத்து விட்டு வேறு அலுவல்களில் ஈடுபட்டான்.

ஒரு வாரத்திற்குப் பிறகு ஒரு நாள மாலை, மெருகு குலையாத மோட்டார் ஒன்று குமரவேலனின் வீட்டு வாசலில வந்து நின்றது; அதிலிருந்து டிரைவர் இறங்கிவந்தான். அறையிலிருந்து தெருப்பக்கம் சென்ற குமரவேலனிடம் ஒரு வெள்ளைத் தாளை கொடுத்தான். அன்றிரவு குமரவேலன் தலைமையில் 'விடியுமா?' என்ற நாடகம் நடைபெற விருப்பதையும்-அதற்கான ஏற்பாடுகளை செய்து விட்டதாகவும் – அனுப்பியிருக்கும் மோட்டாரில்-நாடகம் துவங்குவதற்குள் வந்துவிடும்படியும்-அலுவல் மிகுதியால் நேரில் வரமுடியாததற்கு வருந்தம் தெரிவித்தும், இந்திரா அந்த வெள்ளைத் தாளில் எழுதி அனுப்பி இருந்தாள்.

குமரவேலனுக்கு இந்திரா அறிமுகம் செய்துவைக்கப்பட்ட போது 'வாருங்கள் வணக்கம்' என்று வாய் நிறைய கூறி தன் சிவந்த கரங்களைகுவித்துவணக்கம் செய்தாள். நாட்டியக்காரி போல் உடுத்துக் கொண்டிருந்த இந்திராவைப் பார்த்தது. 'நீங்களும் நடிக்கப் போகிறீர்களா?' என்று கேட்டான் குமரவேலன்; ஆமாம், ஒரு சீனில் மட்டும்தான்-நாட்டியமாடப் போகிறேன்-என்று புன்முறுவல் பூத்தபடியே கூறினாள் இந்திரா.

'கலைத் துறையிலேயே ஒரு புதிய சகாப்தம்' என்றான் குமரவேலன்.

'அந்த புதிய சகாப்தத்தை துவக்கிவைத்த பெருமை உங்கள் பரம்பரைக்குத்தானே சொந்தம்!'' என்று உடனே பதிலளித்தாள் நாட்டியக்காரியின் தோற்றத்தில் நின்ற அந்த கல்லூரி மாணவி.

நாடகம், சமுதாயத்தின் கோணல்களைப் படம் பிடித்துக் காட்டிற்று: ஒவ்வொரு காட்சியிலும் புதிய எண்ணங்கள் நடமாடின. உரையாடல்களில் புரட்சிக் கருத்துக்கள் பின்னிக் கொண்டிருந்தன: ஆடம்பரத்திலும்—மேனியை அழகுபடுத்திக் கொள்வதிலுமே நேரத்தை வீணாக்கிக் கொண்டிருக்கும் கல்லூரிமாணவிகளிடையே, சமுதாய மறுமலர்ச்சிக்கான பணிகளில் ஈடுபடும் இந்திராவின் சமூக சேவையிலே சிந்தனையைப் பறிகொடுத்திருந்த குமரவேலனுக்கு பல காட்சிகள் உருண்டுவிட்ட பிறகுதான் அந்த நாடகம் தன்னால் உருவாக்கப் பட்டது என்பதை தெரிந்துகொள்ள முடிந்தது.

நாடகம்முடிய இன்னும் இரண்டொரு காட்சிகளே இருந்தன. அதற்கிடையிலேதான் இந்திராவின் நடனம் ஆரம்பமாயிற்று. இந்திரா இவ்வளவு சிறப்பாக ஆடுவாள் என்று குமரவேலன் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. நாட்டியக் கலையின் உச்சாணிக் கொப்பிலே நிற்கும் நாட்டியராணிகள் கூட, சில உணர்ச்சிமிக்க பாவங்களை இந்திராவிடமிருந்துதான் கற்றிருக்க வேண்டும். அரங்கத்தலே பலமுறை ஆடி பழக்கப் பட்டவள்போல அமைந்திருந்தது அவள் நாட்டியம் தோள் மிகுந்து துள்ள-துடைவளைந்து கூத்தாட—தாள் மிதந்து கெஞ்ச—தளிர்க் கரங்கள் கொஞ்ச பல்வேறுபட்ட மன நிலைகளை அரங்கத்திலே இந்திரா சித்தரித்தாள். பலத்த கைதட்டல்களுக்கிடையே அவள் நாட்டியமும் முடிந்தது: நாடகத்தை பாராட்டாமல — நடித்தவர்களை மட்டும் பாராட்டிவிட்டு மேடையை விட்டு இறங்கினான் குமரவேலன்.

அத் திங்கள் முகத்தழகி தன் சிற்றிடை துவள—தித்திக்கும் இதழ்களில் முத்து நகை புரள-சித்திர விழிவேல் உருள—சிங்காரக் கருங்கூந்தல் நெற்றியிலே புரள—அவன் எதிரே வந்து நின்றாள்.

'இந்திரா! ஆடற் கலைக்கு அழகு சேர்க்க வந்தவள் நீ. உன் கலைத் தொண்டை நான் பாராட்டுகிறேன்'—என்று கூறிவிட்டுப் புறப்பட்டான் குமரவேலன்.

'நானும் வருகிறேன்-என் காரிலேயே வந்து நீங்கள் இறங்கிக் கொள்ளலாம்' — என்று இந்திரா கூறியதை குமரவேலனும் மறுக்க முடியவில்லை.

அந்த லட்சியவாதியின் நெஞ்சத்திலே புரட்சிக் கருத்துக்களோடு 'புதியதொரு சலனத்தையும்' தந்துவிட்டு – விடைபெற்றுக் கொண்டாள் இந்திரா. அவன் இதயத்திலே இருந்து ஏதோ ஒரு உயர்ந்த பொருளை கவர்ந்து செல்வதைப்போல — இருளைக் கிழித்துக்கொண்டு அந்த மோட்டார் பறந்து சென்றது.

★

அதற்குப் பிறகு இந்திரா கல்லூரியில் இருந்து திரும்பும்போதெல்லாம் குமரவேலன் வீட்டிற்கு அடிக்கடி வந்து போவாள் இந்திராவின் அன்பான அறிவு நிறைந்த வார்த்தைகளும்—அடக்கமான பண்பும் குமரவேலனின் தாய்க்கு மிகவும் பிடித்திருந்தது. 'இந்திரா என்னைவிட்டுப் பிரிந்துபோன என் செல்வ மகளைப் போலவே இருக்கிறாயம்மா நீ' என்று ஆவலோடு அவளை அணைத்து முகதமிடுவாள். அப்பொழுது இந்திராவின முகம் நாணத்தால் சிவப்பேறிவிடும்.

கல்லூரி விடுமுறை நாட்களில் இந்திரா தன் பொழுதையெல்லாம் குமரவேலன் வீட்டிலேயே கழித்துவிடுவாள்: சமுதாயசீர்திருத்தம்-தாயக விடுதலை-ஏழை-பணக்காரன்-என்ற பிரச்சனை இப்படி பல விஷயங்களைக் குறித்த நெடுநேரம்வரை குமரவேலனுடன் விவாதித்துக் கொண்டிருப்பாள்.

இந்திராவின்தொடர்பு ஏற்பட்ட பிறகு குமரவேலனின் வாழ்க்கையிலே ஒரு புத்துணர்ச்சி ஏற்பட்டது. அவன் லட்சியபுரிபயணத்திற்கு இந்திராவின் நெடுங்கயல் விழிகள் திசை காட்டும் தீபக் கம்பமாக உதவிபுரியும் என்ற நம்பிக்கை குமரவேலனிடம் வளர்ந்தது.

தன் வாழ்க்கையில் சந்தித்த முதல் ஆடவன், அவன் எழுதிக் குவிக்கும் இலக்கியப் படைப்புகளைப்போலவே-எழில்மிக்க வாலிபனும்-இலட்சியத் திருவிளக்காய் தன் இதயத்தில் ஒளி விளக்காய் இடம் பெற்று விட்டதைக் குறித்து இந்திரா பூரிப்படைந்தாள்.

★

ஒருநாள் இலக்கிய சர்ச்சை நடந்து கொண்டிருந்தது.

'காதல வேடி காண்போரின் ஆவியுண்ணும் கயல்விழிகள்' இந்த வாசகத்தை சுட்டிக்காட்டி குமரவேலனை பொருள் சொல்லும்படி கேட்டாள். அறையில் நிறுத்தப் பட்டிருந்த ஒரு பெரிய நிலைக் கண்ணாடிக்கு முன்னால் குமரவேலன் இந்திராவை அழைத்துக் கொண்டுபோய் நிறுத்தி 'கண்ணாடியை நன்றாக உற்றுப்பார் இந்திரா! இப்பொழுதும் அந்த வாசகங்களுக்கு பொருள் தெரியவில்லை என்றால் நான் விளக்குகிறேன்.' என்று குமரவேலன் குறும்பாக கூறியபொழுது இந்திரா 'கலகல' வென்று சிரித்துவிட்டாள்.

★ தொடர்ச்சி 10-ம் பக்கம்

One side page dark

# ★ சீனத்து மண்ணிலே - சூ

ஆரம்பமாக இருக்கும்போது குடும்பத்துக்கேற்ற கட்டுப்பாடுள்ள சிறுமி-பூவானவுடன் புருஷனுக்கேற்ற பணிவிடைகள் புரியும் வேலைக்காரி-பிறகு முறைப்படி குழந்தை வளர்க்கும் தாய்—கணவன் இறந்துவிட்டால் ஆசாரம் குன்றாமல் நடந்துகொள்ளும் விதவை.

—இதுதான் இந்துமதம் உலகுக்கு அளித்த பெண்குலத்தின் படப்பிடிப்பு

அப்பூசத் தெரிகிறதும்; அறுசுவை உண்டிகளைப் பாட்டிகள் கற்றுக் கொடுத்த பாணி குறையாமல் செய்து பரிமாறத் தெரியும்! கோலம் தெரியும்; ஊஞ்சல் தெரியும்; ஆனால் என்று போல வளர்த்துவரும் பகுத்தறிவு அவர்களுக்குப் புரியாது!

அப்படிச்சுரையே அவர்கள் அமைப்பட்டுக்கிடக்கும் இருட்டுச் சிறைச் செய்த எண்ணமே அவர்கள் கருப்புவிழிகளைப் பிடுங்கி எறியும் கழுகு!

—இந்த நாட்டுப் பெண்களின் இழிநிலையில் எந்தவகையிலும் குறைந்ததல்ல சீனத்துத் தாய்க்குலம்!

மடமைச் சேற்றிலே ஒவ்வாதுக் குழம்பென சீனத்து திரேகமெல்லாம் பூசிக்கொண்டிருந்தனர்! கள்ள மனப்பான்மையும் குனிந்து கொடுக்க வேண்டிய அளவுக்கு அவர்கள் இதய வாசல் ஊசிமுனையினும் உருவில் சிறியதாய் அமைந்திருந்தது!

எதற்கெடுத்தாலும் அச்சம்; காலையிளம் பரிதியைப் போல் சுடர்விட்டுக் கிளம்பும் சீர்திருத்தக் கருத்துக்களை மனதில் கொளவ முடியாத அளவுக்கு வளர்ந்திருக்கும் பயிற்பு; தொட்டாற் சுருங்கியைப் போல் புதுமைக் கருத்துக்களைத் தொட்டுவிட்டால் உடல் வேர்த்து, உள்ளம் உருகிடச் செய்யும் மடம்; நல்லதைச் செய்வதற்கோ நாணம்-பெண்களுக்கிருக்க வேண்டிய நான்கு பண்புகளும் சீனத்தில் இப்படித்தான பயன்பட்டன!

—இத்தகைய மாதருலகச் சேற்றைக் கிழித்துக் கொண்டுதான் சூங் சகோதரிகள் என்று அழைக்கப்படும் செந்தாமரை மொட்டுகள் தலை நீட்டின!

சீனாவிலே பெருமையோடு அழைக்கப்படும் சூங் சகோதரிகள் மூன்று பேர்—அவர்களைப் பற்றி வேடிக்கையாகச் சொல்வார்கள்:

'ஒருத்தி பணத்தைக் காதலிக்கிறாள்; ஒருத்தி சீனத்தைக் காதலிக்கிறாள்; இன்னொருத்தி புகழைக் காதலிக்கிறாள்"

சீனத்தைக் காதலிக்கும் அந்தச் சீமாட்டிதான் சூங் சிங்லிங் என்று அழைக்கப்படும் திருமதி சன்யாட்-சென்!

புகழைக் காதலிக்கும் இவரது தங்கைதான் அமெரிக்காவின் கைக்கூலியான சியாங்கே ஷேக்கை மணந்து கொண்டு இன்று பார்மோசாவில் திருடர்களைப் போல வாழ்வு நடத்தும் துரோகிகள் கூட்டத்துள் ஒருவளாக வாழ்கிறாள்!

அன்னை நாகம்மையார் திராவிடர் இயக்கத்திற்கு ஆற்றிய தொண்டினைப் போலவே திருமதி சன்யாட்சனும் சீனத்தின் மாதாவாகக் கருதப்படுகிறார்!

விடுதலைக் கொடியுடனும், நாட்டவர் கெடுதலையெண்ணுகை சீரிய பண்புடனும் கோமிண்டாங் கட்சி சீனத்தைச் சீர்திருத்தக் களவிடை காட்டி உருக்கிவார்த்தபோது சிங்லிங் அர்மைபார் பெண் சிங்கமென படைத் தலைமையை ஏற்று நடத்தியிருக்கிறார்!

அவள் பள்ளிச் சிறுமியாக இருந்தபோது "ஐந்தடிக்கப்பால் அவள் குரல் கேட்காதே!"—என்று கேலி செய்யப்பட்டவள்!

அந்தச் சிறுமி சீனத்தைக் உளமாறக் காதலிக்க ஆரம்பித்த பிறகோ அவள் குரல் அகிலமெல்லாம் கேட்க ஆரம்பித்தது! மலைபோன்ற மாசுத் திரளாய் சீனத்தை இருட்டறையில் மூடி வைத்திருந்த மஞ்சு பரம்பரை இரைத்த இக்குரல் கேட்டு புற்றுக்குள் பாம்பு புகுந்துகொண்டது!

சன்யாட்சென் இவரைவிடப் பல வயது மூத்தவர்! இருந்தும் இவர்களது காதல் வாழ்விலே எந்தவிதத் தொய்வும் தோன்றவில்லை!

நிழல் போலக் கணவனோடு



இருந்து, அவர் நெஞ்சம் தளர்ந்து போயிருக்கும் தருணத்தின் போதெல்லாம் சுங்லிங் துணிவு கொடுத்திருக்கிறார்.

காதலுரை நிகழ்த்திக நம்பே! தேனே!!—என்று ஒருவரையொருவர் கொஞ்சுவதற்குக் கூட நேரமில்லாமல் தாய் நாடு அவர்களது வாலிபத்தை—அது தந்த வற்றாத இன்ப ஊற்றை வலியவந்து பிடுங்கிச் சென்றிருக்கிறது!

கண்ணம்வருடி, கண்பொத்தி உள்ளம் குளிரும் விளையாட்டுகள் விளையாட வேண்டிய காலத்தையெல்லாம் நோய்ப் படுக்கையில் கிடக்கும் சீனத்தின் புது வாழ்வுக்காகத் தியாகம் செய்துவிட்டனர்!

சன்யாட்செனுக்குக் காரியதரிசியாக சுங்லிங் பணியாற்றத்தான் சென்றார்! ஆனால் வழக்கமாக இதுபோன்ற சந்தர்ப்பங்களில் என்ன நேருமோ அது அங்கும் நேர்ந்துவிட்டது.

'எனக்கு செயலாளராக இருப்பதால் மட்டும் நீ தாயகத்திற்கு வேண்டிய உன் கடமையைச் செய்துவிட முடியாது. என் இதயத்தின் சிறைப் பறவையாகவும் இருக்க வேண்டுமென" அவர் கேட்க, இரு மனங்களும் பிறகு ஒன்றிவிட்டன!


## பொங்கல் மலர்

1956.

★

★ எண்ணத் தெவிட்டாத வண்ணமலர்ச் சோலையாய்...

★ திராவிட மண்ணுக்கு உரியோரின் உடை வாளாய்...

★ கண்ணுக்கு நிகர் பெண்ணுக்குப் பெருமை தரும் பொன்னேடாய்...

★ செங் கரும்புச் சுவை சிந்தும் இள மழலைச் செல்வங்களின் புது மலராய்..

★ தொழிலாளத் தோழர்களின் புரட்சிப் பாசறையாய்...

★ மாணவர்க்குப் பாடிவீடாய்...

★ சித்திரக் கருவூலமாய்...

★ செந்தமிழ்த் தேன் கூடாய்த் தயாராகிறது,
தங்கம் நிகர், மலர்!

## "முரசொலி"

## பொங்கல் மலர்

அவாள் ஏடுகளுக்குச் சவால் விடும் அளவில், அறிவுக் கதிர் பாய்ச்சும் காவியத் தொகுப்பாக உருவாகிறது!

விலை இரண்டே ரூபாய்தான்

# ர்காட்டும் விடிவெள்ளி ! ★



சொந்த நாட்டின்பால் அன்பு காட்டத் துவங்கிவிட்டோர் நெஞ்சம் குழையும் போதெல்லாம், அவர்களுக்கு துணிவுதரும் மாமருந்து போலிருக்கிறது, சூங்லிங் அம்மையாரின் சரித்திரம்!

மண்ணில் புழுவாக பெண் குலத்தை நெளியச் செய்தோரை கண்ணில் கனல் சிந்தி அழித்தவர், சீனத்தின் எதிரிகள் பாலும் அந்த ஆயுதத்தையே உபயோகித்தார்!

அதற்கென அவர் அடைந்த இன்னல்கள்; அவரது குடும்பம் பெற்ற துயரங்கள் கணக்கிலடங்கா!

1927-ம் புரட்சியின்போது காண்டன் நகரில் தாயகத்தின் எதிரிகள் சூங்லிங் அம்மையாரை குழிதோண்டிப் புதைத்துவிட மூலை முடுக்குகளிலெல்லாம் வலை போட்டுத் தேடினர்.

அந்த நேரந்தான் அமெரிக்காவில் கல்வி கற்று—பின் வருங்காலத்தின் சீனக் குடியரசு கண்ட ஜனாதிபதியின் மனைவியாக இருந்த சூங்லிங் ஒரு கிராமத்து பெண்ணைப்போல மாறுவேஷம் போட்டுக்கொண்டு, கையில் காய்கறி கூடையுடன் காண்டன் நகரைவிட்டு வெளியேற வேண்டியிருந்தது!

ஆனால் சில மாறுவேஷக்காரர்கள் இந்த சீமாட்டியை மாற்ற முனைந்தபோது அவை யத்தனையும் மலையில் மோதிய எலியென தரைமட்டமாயின!

சன்யாட்சென் மறைந்தார்; அவருக்குப் பிறகு வந்த சியாங்கேஷேக்கோ நோய்ப் படுக்கையிலிருந்து எழுந்து நடக்க ஆரம்பித்த சீனத்திற்கு விஷம் கொடுத்து வீழ்த்தும் வேலையிலிறங்கினன்!

அமெரிக்க பிரபுக்களுடன் உறவு கொண்டு பிற்போக்குவாதிகளுக்கு தலைமை தாங்கினன்!

சன்யாட்சென் பெயரைக் கூறிக் கொண்டே அவரது கொள்கைகளுக்குச் சமாதி யெழுப்பும் திருப்பணியைத் துவங்க ஈசலென சியாங்கின் ஏவலாளர்கள் தூபம்போடத் துவங்கினர்!

சுருங்கச்சொன்னால் காந்திக்குப் பிறகு இருக்கும் காங்கிரசாகிவிட்டது கோமின்டாங்!

சுங்லிங் அம்மையாரால் இந்தக் கொடுமையைத் தாங்க முடியவில்லை.

தானும், கணவரும் கட்டிக் காத்த கட்சிக் கோட்டை வெளவால்களின் உறைவிடமாவதை அவரால் சகிக்க முடியவில்லை.

எனவே எல்லாம் தெளிவுபட அறிக்கையொன்றை வெளியிட்டார்!

"சன்யாட்சென் பெயரைக் கூறிக் கொண்டு கட்சியை நடத்தும் சிலர் சன்யாட்சென் பெயருக்கே தீங்கு செய்கின்றனர். ஆகையினால் கோமின்டாங் பிசுபற்றும் புதிய கொள்கையினின்று விலகிக் கொள்ள வேண்டியவளாகிறேன்

"எல்லாப் புரட்சிகளும் சமுதாய நிலைகீழ் மாறுபாட்டை அடிப்படையாகக் கொண்ட சமுதாயப் புரட்சிகளாயிருக்க வேண்டும். இல்லாவிட்டால் அவை புரட்சிகளாகாது; அரசாங்கத்தில் எழுந்த ஒரு மாறுபாடாகவே கருதப்படும்."

—இப்படித்தான் கூறிற்று இன்று கம்யூனிஸ்ட் சீனாவின் தூண்களுள் ஒருவராக இருக்கும் திருமதி சன்யாட்சனின் அறிக்கை!

சமுதாயச் சீர்திருத்தங்களில் அவர் கொண்டிருந்த பாசமும், பற்றும் இன்று அதை மறந்துவிட்டுத் திரியும் இந்தியக் கம்யூனிஸ்ட்டுகள் உற்று நோக்க வேண்டிய கருத்துகளாகும்!

கோமின்டாங் இயக்கத்தவர் கொள்ளைக்காரர்களாக மாறியதைத் தாங்கமாட்டாத சுங்லிங் சீனவைத் துறந்து ஜெர்மனி போன்ற நாடுகளைச் சுற்றிக் கொண்டிருந்தபோது சியாங்கேய்ஷேக் அம்மையாருக்கு மக்களிடையுள்ள நல்ல பெயரினை பயன்படுத்தக் கருதி உயர் பதவி தருவதாக அழைத்தான்! அவைகளையெல்லாம் இவர் வேண்டாமென்று உதறியெறிந்து விட்டார்!

'மந்திரி நாற்காலி' என்றதும் நாக்கைத் தொங்க விட்டுக் கொண்டோடும் குறைமதியினர் ஆண்கள் வடிவிலே ஆயிரக் கணக்கில் வாழும்போதே அம்மையார் கொள்கை வைரம் பாய்ந்த உள்ளத்தினராய் ஒளி வீசிக் கொண்டிருந்திருக்கிறார்! எதிரிகள் கோடி இட்டழைத்தாலும் தொடேன்—என தோள் தட்டி ஆடிய அந்த சீமாட்டியைக் கைகுலுக்குவோர் தங்கள் சிறுமதியை நினைத்துத் தலை கவிழட்டும்!

இதுபோன்ற திடமனப்பான்மையும், கொள்கையிலேயுள்ள உடும்புப் பிடியும்தான் அவரை சியாங்கின் எதிரியாக்கின.

ஒருநாள் கோமின்டாங்கினால் விஷமாக்கப்பட்ட ஒரு பெரிய புள்ளி அம்மையாரை அணுகி, 'நீர் மட்டும் சன்யாட்சென்னின் துணைவியாராக இருந்திராவிட்டால் என்றைக்கோ உம் குரல்வளையை நெரித்திருப்போம்!"—என்று கூறிவிட்டுப் போனானாம்!

இதுபோன்ற ஈனச்செய்கைகளாலும் இவர் மனம் மாறிவிடவில்லை.

அடிபடி மாறாத காரணத்தால் தான் இன்று அவர் சீனத்தின் தலைவியாகக் காணப்படுகிறார்; மாசேதுங்-கிற்கு அடுத்த படியாகவுள்ள சீனக் குடியரசின் உதவித் தலைவர்—என்னும் பதவியை வகிக்கிறார்!

★ கொள்கையில் உடும்பு!

★ தோழர்களைக் கூவி அழைப்பதில் சேரும் சிங்கம்!

★ அஞ்சா நெஞ்சத்தில் படை பல எதிர்க்கும் யானை!

★ அருமை சன்யாட்சனுக்கோ அவர் ஆடும் மயில்!

—அத்தகையோரை வரவேற்பதில் தென்னகம் பெருமைப்படுகிறது! சூங்லிங் வருகையினாலாவது சோம்பிக் கிடக்கும் மகளிர் இனம் மேலும் விழிப்பு பெறுமென நம்புகிறோம்! கீ


## பொங்கல் மலர்

1956.

★

கருணாநிதி எழுதும்....

**தென்னவன் காதை**
(வீர காவியம்)

★

**அரும்பு**
(உணர்ச்சிக் கதை)

★

**கிரேக்கப் பெரியார்**
(கொள்கை நாடகம்)

★

**பரதாயணம்**
(கேலிச் சித்திரம்)

★

**குறளோவியம்**
(வர்ணனை ஓவியம்)

★

இத்தனையும் உண்டு! முத்தனைய ஏனையோரின் எழுத்துக் குவியல்களும் உண்டு! அத்தனையும் கற்கண்டு!

**விலை இரண்டே ரூபாய் !**


Filmed as bound

## ஏன்?

20-12-55
நெல்லை

ஆசிரியர் அவர்களுக்கு,

இந்திய உபகண்டத்தின் மத்திய பீடமான டெல்லியினுள்ளே வெள்ளம் வந்துவிட்டது" என்ற செய்தியை அறிந்தார் அலகபாத் அண்ணல், பின்னங்கால் பிடரியில் படக் குதித்தெழுந்து ஓடி, படு நாசமடைந்தவைகளை மெய்சிலிர்க்கப் பார்வையிட்டு ஆவன செய்தார். வெள்ள நிவாரணத்திற்காக அங்குமிங்கும் ஓடினார். அல்லலுற்ற மக்களை நேரிற்கண்டு நேர்ந்த நாசத்திற்குப் பரிகாரந் தேடும் படலத்தைப்பரிவன்புடன் தொடங்கினார். வெள்ள நிவாரண நிதியிலிருந்து வேண்டிய மட்டும் அள்ளிஅள்ளிக் கொடுத்தார். தமிழகத்தினின்று—அதாவது தேயுந் தெற்கிலிருந்து பணந்திரட்டி வாழும் வடக்கிற்கு அனுப்பப்பட்டது. அனுதாபத்தந்திகள் புயல் வேகத்தில் பறந்தன வடக்கு நோக்கி.

சமீபத்தில் நெஞ்சு உருகும் ஒரு சம்பவம் தென்னாட்டிலுள்ள தமிழகத்தில் நடந்தது நினைத்தாலே நெஞ்சு சுக்கு நூறாய் உடைந்து விடும். எழுதக்கூட முடியாதவாறு நேரிட்ட ஒரு பயங்கரச் சம்பவம். ஏற்கனவே கால்களும், கைகளும் அடிமை விலங்குகளால் பூட்டப்பட்டு தலைநிமிரா வண்ணம் தாழ்த்தப்பட்டிருக்கும் தமிழகத்தில் இன்னுமோர் பேரிடி விழுந்துவிட்டது. வடவனால் முடமாக்கப்பட்ட தமிழனை சொல்லொணாத் துயரக்கடலில் ஆழ்த்தியது சூறாவளியும் புயலும்.

காமராசர் பாதிக்கப்பட்ட தஞ்சை, இராமநாதபுரம், திருச்சி, மதுரை மாவட்டங்களுக்குச் சென்று உணவும், உடையும் வழங்கியிருக்கிறார் பாதிக்கப்பட்டவைகளைப் பார்வையிட்டு பெருமூச்சு விட்டார்.

ஆனால் பத்து லட்சத்தை ஏப்பம் விட்டு பஞ்சணையில் படுத்துறங்கும் கவர்னர் 'திரு பிரகாசா' தென்றல் வீசும் உல்லாச உப்பரிகையிலே உலாவிக் கொண்டிருக்கிறார். குடிசைகள் அடித்துக் கொண்டு போகப்பட்ட நேரத்தில் குடியாளுங் கோமான் சுற்றுப் பயணம் சென்றிருக்கின்றார். மக்கள் துயர வெள்ளத்தில் மூழ்கிய நேரத்தில் மக்கள் காவலர் மந்தமாருதத்தில் மிதந்திருக்கின்றார்.

மறைந்த குடில்கள்—இடிந்த மாளிகைகள்—முறிந்த தருக்கள்—சிதைந்தவீடுகள்—இவைகளனைத்தும் அழிந்த சின்னங்களாகக் காணப்பட்டன. தேயுந் தெற்கு வெள்ளக் காடாய்—பிணக்காடாய் காட்சியளிக்கிறது.

நாம் கஷ்டப்பட்டோரின் கண்ணீரைத் துடைக்க விரிட்டெழுகிறோம். தேயும் தெற்கை 'மார்க்கட்' ஆக வைத்துக் கொண்டு தெற்கிலுள்ள அமைச்சர்களை ஏஜெண்டுகளாக நியமித்து சுரண்டும் சர்க்கார். வெள்ள நிவாரண நிதியிலிருந்து ஒன்றரை இலட்சம் ரூபாய்களை அனுப்பியிருக்கிறதாம்! வடக்கே புயல் மழை, என்றதும் முண்டியடித்துக் கொண்டு ஓடின மோதிலால் நேருந்தர் தேய்பியமும் தமிழகத்திற்கு ஏன் வரவில்லை?

அன்பன்,
தமிழன்பன்

## உங்கள் பார்வை

### குறுக்கு வழி!

தோடனேரி
9—12—55

ஆசிரியர் அவர்களுக்கு,

மத்திய அரசாங்க கல்வி அமைச்சர் அலுவலகத்தினர் 'இந்தி டைப்ரைட்டர்" கீ போர்டை நிர்ணயிப்பது பற்றி விசேஷக் குழு செய்திருக்கும் சிபார்சு குறித்து 5—12—55-ல் 'தமிழ் நாடு' இதழ் வெளியிட்டிருக்கிறது.

அதாவது இந்தி டைப்ரைட்டர் "கீ போர்ட்" நிர்ணய விஷயம் ஆலோசனையில் இருந்த வந்ததாம், பின்னர், 1953-ம் வருஷம் நவம்பரில் இலட்சுமணபுரியில் நடைபெற்ற தேவநாகரி லிபி சீர்திருத்த மாநாடு செய்த சிபார்சை ஏற்றுக் கொண்டு. இந்தி டைப்ரைட்டருக்கு எவ்விதமான 'கீ போர்டு" மேற்கொள்ள வேண்டும் என்ற சர்ச்சையைத தீர்க்கத்தான் மேற் கூறிய குழு நியமிக்கப்பட்டதாம்.

அந்தக் குழு, இந்தி டைப்ரைட்டருக்கான வேலையை முடிவு செய்ய, கீ போர்டும் உருவாகியிருக்கின்றதாம். அதாவது, ஸ்டாண்டர்ட் இந்தி டைப்ரைட்டரில் 48 சாவிகளும், 92 எழுத்துக்களும் இருக்குமாம். ஆனால், கையில் எடுத்துச் செல்லக் கூடியதுக்கு 42 சாவிகளும், 86 எழுத்துக்களும் இருக்குமாம். கீ போர்டின் உருவப் படமும் பிரசுரமாக்கப் பட்டுவிட்டதாம்.

இதைப் பொதுமக்கள் தெரிந்து கொள்வதற்காக வெளியிட்டிருக்கிறார்களாம். இத்துடன் கீ போர்டின் தொழில் நுட்பங்களில் அக்கறை கொண்டவர்கள், உருவானதும் காரிய சாத்தியமானதுமான ஆலோசனைகளை டிசம்பர் 31-ம் தேதிக்குள் கல்வி அமைச்சர் இந்தி பிரிவுக்கு தெரிவிக்க வேண்டுமாம் குறிப்பிட்ட தேதிக்குப் பின் வருபவைகளை கவனிக்கப் படமாட்டாதாம். வேதனை தரக்கூடிய விளம்பரம். நெஞ்சம் விம்முகிறது. இனி அடுத்த முகாம் சென்னைக்கு இருக்குமென நினைக்கிறேன். டில்லியில் உருவானதை மாதிரிக்கு ஒரு இந்தி டைப்ரைட்டர் கொடுத்து அதை வழக்கம் போல் ஆதரிப்பவர்கள் இந்தியை திணிப்பதற்கு செய்த சூடசமம். இப்பொழுதும் அஞ்சல் அட்டைகளில், அஞ்சற் பில்லைகளில், அஞ்சலுறைகளில் வருத்தத்துடன் கண்ணுறுகிறோம். மீண்டும், இந்தியை திணிக்க வழி வகுத்துக் கொடுக்கிறது இந்த ஆட்சி.

தமிழகத்திலிருந்து இந்தியை ஒழிக்கமுயற்சி எடுத்துக்கொண்டு வரும் இந்த நாளில் மேலும் மேலும் இந்தி கொணர்ந்தால் திராவிடம் ஏற்றுக் கொள்ளாது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்பன்,
டி. வி. பொன்னையன்.

★

### சரித்திரம் சிரிக்கும்!

28-12-55
வேலூர்

அன்புள்ள ஆசிரியருக்கு,

இந்திய உபகண்டத்தின் சரித்திரத்தைப் புரட்டுகின்ற நேரத்தில் இரண்டு வேறுபட்ட நாகரீகங்களின் நிழலாட்டத்தை தெள்ளத் தெளிய உணர முடிகிறது. ஒன்று இந்நாட்டிற்குள் பச்சை தேடி புகுந்த ஆரிய இனம். மற்றொன்று இந்த மண்ணிற்கே சொந்தமான திராவிட இனம். நேரு பண்டிதர் எழுதிய உலக சரித்திரத்தில் மட்டுமல்ல—இந்திய உபகண்டத்தின் வரலாற்றை எழுதிய பெரும்பாலான வரலாற்று ஆசிரியர்கள் இந்த உண்மையை விளக்கி எழுதியுள்ளனர்.

காலஞ்சென்ற ஈராஸ்பாதிரியார் போன்றவர்கள் ஆயிரம் சான்றுகளைக் காட்டி இந்த உண்மையை தெளிவுபடுத்தி இருக்கிறார். ஆனால் வளர்ந்துவரும் இந்த வேற்றுமையை மறைக்க பணிக்கர் போன்றவர்கள் ஏதேதோ கூறி வருகின்றனர். சென்ற வாரம் விஸ்வபாரத சர்வகலாசாலை பட்டமளிப்பு விழாவில பேசிய பணிக்கர்—ஆரிய திராவிட ஐக்கியமே இந்து பண்பாட்டின் அடிப்படை என்று கூறியிருக்கிறார் மான்குட்டியையும்—ஓநாயையும் ஒரே இனம் என்று கூறும் அவரின் 'ஞானத்'தைக்கண்டு சரித்திரம் சிரிக்கிறது. குறளும்—கீதையும் ஒன்றாமே! சிலப்பதிகாரமும்-இராமாயணமும்—ஒரே பண்பாட்டை அடிப்படையாகக் கொண்டதுதானா? சரித்திரம் படிக்காதவர் அல்ல சர்தார். 'ஆரிய பண்பாடும் திராவிடப் பண்பாடும்-ஒன்றுக்கு ஒன்று மாறுபட்டது. திராவிடப் பண்பாடு-ஆரியப் பண்பாட்டை விட சிறந்தது' என்று நேரு பண்டிதர் உலக சரித்திரத்தில் குறிப்பிட்டிருக்கும் வரிகளையே பணிக்கரின் பார்வைக்கு வைக்க விரும்புகிறேன்.

அன்பன்,
சௌந்திரபாண்டியன்

★

### முன் வருமா?

பொத்தனூர்
20—12—55

ஆசிரியர் அவர்களுக்கு,

நடந்துவரும் இந்த மாதத்தில் எந்த மதத்தைச் சேர்ந்தவர்களாயினும், எந்தக்கொள்கை உடையவர்களாயினும் சரியே— திருச்சி நகரை விட்டு ரயில் மூலம் வெளியே சென்றால் சீரங்கத்தில் பலவருடங்களாக பள்ளிக் கொண்டிருக்கும் ரங்கநாதரின் பெயரால் யாத்திரிகர் வரி என்பதாக வசூல் செய்கின்றார்கள். இதை கண்டித்து தாங்களும் சென்ற ஆண்டு எழுதியிருந்ததாக ஞாபகம். "சாவிற்கு வந்தவள் தாலி அறுத்த கதையைப் போல" சீரங்கத்தில் விழா என்றால் திருச்சியில் நுழைபவர்கள் வரி தரவேண்டிய பாதாப நிலை ஏற்படுகின்றது. இந்த வரித் தொகையை ரயில்வே நிர்வாகம் என்ன செய்யுமோ தெரியவில்லை? ஆனால் அந்த நேரத்தில் புயலால்—வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோரை பார்க்கும் போது உள்ளம் உருகுகிறது சோகத்தால். சொத்து இழந்து, சுகம் இழந்து, உணவு இழந்து, உடை இழந்து மனைவியை இழந்து மழலையை இழந்து, பாதிக்கப்பட்டோருக்கு ரயில்வே நிர்வாகம் பாராட்டக் கூடிய வகையில் உதவி செய்ய முன் வருமா? வீணாக காரியங்களுக்கு மக்களின் அறிவைத் தூண்டிவிடாமல் இருக்குமா?

இங்ஙனம்,
ரமணி

★

## அவர் யாரோ!

பாரிஸ் நகரத்து 'சலூன்' ஒன்றில் ஒரு கனவான் ஒரு சிறுவனோடு நுழைந்தார். பக்கத்திலிருக்கும் ஒரு இடத்திற்கு அவசரமான வேலையாக உடனே போய்த் திரும்ப வேண்டும் என்று சொல்லி, முதலில் தமக்கு 'கிராப்' செய்து விடும்படி கடைக்காரரைக் கேட்டுக்கொண்டார். கிராப் முடிந்தது. கனவான் புறப்பட்டார். அடுத்த சிறுவனுக்கும் கிராப் முடிந்தது, கனவான் திரும்பிவரவில்லை. பையனைக் கடைக்காரர் ஒரு நாற்காலியில் உட்கார வைத்து; உன் அப்பா இதோ வந்திடுவாரு பயப்படாதே தம்பி'—என்று கூறினார்.

பையன் திடுக்கிட்டவனாக—என் அப்பாவா! அவர் என் அப்பா இல்லை தெருவோடு வந்தவர் என் கையைப் பிடித்து 'வாடா தம்பி'—நாம் இரண்டு பேரும் கிராப் வெட்டிக் கொள்ளலாம்' என்று அழைத்துவந்தார். "அவர் யாரோ? நான் யாரோ" என்றான்.

—ரீடர்ஸ் டைஜஸ்ட்.

# ★ துரோகியாகிறர் துரோணுச்சாரியார்! ★

புதுமையைத் தேடி—தன் சிந்தனைச் சக்கரத்தை சுற்றிய படியே ஓடிக் கொண்டிருக்கிறது அறிவுலகம்! செத்துப் போன நேற்று—சாவை அணைக்கப் போகும் இன்று — சாவை நோக்கி உதயமாகும் நாளை இப்படி உருண்டு கொண்டிருக்கும் காலம் 'புதுமையே நீ வா' என்று பாடிக் கொண்டு ஓடுகிறது.

மதம் என்ற பெயரால் மக்களுக்குத் தரப்பட்ட, (உலகின் சில பகுதிகளில் திணிக்கப்பட்ட) அந்த 'போதை மருந்து' எத்தர்களையும் — பித்தர்களையும் வளர்த்து விட்டதால்; புதுப்புது உலகங்களைக் கற்பித்து 'போகும் அந்த' உலகத்திற்கு நுழைவுச் சீட்டு தருவதாக கூறி மக்களை ஏமாற்றி வாழ்ந்த மத போதகர்கள்-மார்க காவலர்கள் வளர்ந்து பெருகலாயினர்; வேண்டாத கருத்துக்களை— மனு, மந்தாதி, ஆகமம், இதிகாசம் என்ற பெயரால் புகுத்தி- மக்களிடையே அந்த மார்க்கத்தைக் காப்பாற்ற எழுந்தவர்கள், மன மருட்சியினையும் — கண் மூடித் தனமாக எதையும் நம்புகின்ற மனப்பான்மையையும் வளர்த்து விடலாயினர்; மக்களின் அறியாமையை பெருக்கிடும் ஆயிரம் கேடுகளுக்கு வித்திட்டு—சமுதாயத்தின் சுயமரியாதையை அடிமைப் படுத்தினர்.

மக்களின் கருத்திலே ஒளி மங்கிப்போன காரணத்தால் காவி கட்டியோரும்-கமண்டல மேந்திகளும்—'கடவுளைக் காட்டுகிறேன்' என்று பாமரரை ஏமாற்றி—சமுதாயத்திலே ஏற்றம் பெற்றனர்.

அந்த ஏமாளித் தனத்தையே அஸ்திவாரமாக அமைத்து— சுரண்டல் மாளிகைகளை உருவாக்கிக்கொண்டு 'இகத்திற்கும்' —'பரத்திற்கும்' நூலேணி அமைப்பதாக கூறிவந்தனர்.

மனித சமுதாயமும் அதை நம்பிற்று; மனுமந்தாதிகள் கட்டிய சூழ்ச்சி வலையில் சிக்கிச் சீரழிந்து கொண்டிருந்தது. ஒன்றே குலம், என்ற ஒப்பற்ற கொள்கை பட்டுப்போய்— சமுதாயத்திலே உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற நிலையும்— வர்ணாஸ்ரமம்கற்பிக்கும்-நான்கு பாகுபாடுகளும்—நாலாயிரம் கிளைப் பிரிவுகளும் – 'மக்களை வாழ்விக்க' வந்தவர்கள் என்று கூறிக் கொண்டு உலவியவர்களால் ஏற்பட்டன. 'எம் மதமும் சம்மதமே' என்று ஒரு பக்கம் மதவாதிகள் கோஷம் எழுப்பிக் கொண்டிருந்த போதே— மற்றொரு பகுதியில் மதம் காரணமாக போரும்—படுகொலையும்—ரத்த ஆறுகளும் தினம் தினம் உற்பத்தியாகிக் கொண்டிருந்தன.

சன்மார்கத்தையும்—அன்பையும் வளர்ப்பதாகக் கூறிக் கொண்டே கமண்டலமேந்திகள்—கள்ளர்களாகவும்- காமுகர்களாவும் மாறி, மக்களிடையே மதச் சண்டையையும்— பேதத்தையும்-உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற வேறுபாட்டையும் வளர்த்து விட்டனர்.

இந்த நேரத்திலேதான் மதச் சேற்றிலே சிக்கி-சிந்தனையைப் பறி கொடுத்திருந்த மக்களை— புதிய யுகம் நோக்கி அழைத்து வர, ஆங்காங்கே அறிவின் தூதுவர்கள் பெருகினர்; மதப் பித்தர்கள் விளைத்த கொடுமைகளையெல்லாம் பொறுத்துக்கொண்டு அவர்கள் பணி புரியலாயினர்; புதுமை விரும்பிகள்-மத வெறியர்களால் கழுவிலே ஏற்றப் பட்டபோதும் — கல்லறையில் மூடப்பட்டபோதும்-நெருப்புக் குண்டத்திலே தள்ளப்பட்ட போதும் 'அறிவே நீ வாழி' என்று கூறியபடியே சாவை அணைத்துக் கொண்டனர்.

இருண்ட பாதையில் சென்று கொண்டிருந்த மக்களும்-சிறிது சிறிதாக விளக்கம் பெற்று தங்கள் பார்வையை புதுஉலகு நோக்கித் திருப்பினர்.

புரட்சிக் கருத்துக்களை வரவேற்றனர்.

கடந்து போனகாலம்-மதத்தால் மனித சமுதாயம் சீரழிந்த விதத்தையும் — சிந்தனையாளர்களால் புதுப்பாதை நோக்கி நடை பழகமுன் வந்ததையும், இப்படி சித்தரித்துக் காட்டுகிறது

ஒரு காலத்தில் சிம்மாசனத்திலே வைக்கப்பட்டிருந்த கருத்துக்கள்—தூக்கி எறியப்பட்டு- வினாடிக்கு வினாடி புதுமை எங்கே? எனத் தேடிக் கொண்டிருக்கும் புது உலகம் இது,— இருபதாம் நூற்ருண்டு!

ஆனல் இப்பொழுதும் சிலர் அன்று கொண்ட கொள்கைகளையே உபதேசித்தும்—ஆகமக் கருத்துக்களுக்கு ஆலவட்டம் வீசிக்கொண்டும்; வேண்டாதவைகளை விடாப்பிடியாக பிடித்துக் கொண்டும் உலவி வருகின்றனர்.

இப்படி செத்துப் போன கொள்கைகளை புனருத்தாரணம் செய்வதிலும்-மீண்டும் மீண்டும் மக்களை இருள்நிறைந்த மார்கம் நோக்கி திருப்பி விடுகின்ற 'திருப்பணிகளிலும்' முன் வரிசையில் நின்று வருகிறர் ஆச்சாரியார்! போருமிடமெல்லாம் பத்தாம் பசலிக் கொள்கைகளையும்-பட்டுப் போன மார்கத்தையும் போதித்து-பாமரர்களிடையே என்றென்றும் ஏற்ற தாழ்வுகள் நிலைபெற்றிருக்க பாடு பட்டு வருகிறர்.

மேலை நாடுகளில் அரசியல் வாழ்விலிருந்து ஓய்வு பெற்றவர்கள்.மக்களின் அறிவு வளர்ச்சிக்கான பணிகளில்ஈடுபடுவார்கள். ஆனல் இவரோ வேண்டாதன. என்று அறிவுடையோரால்விலக்கப்பட்டவைகளை-மெருகேற்றி மக்களிடையே மீண்டும்புகுத்துகின்ற செயலிலே தன் சக்தியையும்-சிந்தனையையும் செலவிட்டு வருகிறர். அறிவுடையோர் இவர் செயல் குறித்து அனுதாபப்பட்டாலும்; மீண்டும். மீண்டும் அவர் பரப்பும் விஷக் கருத்துக்களுக்கு பாமரர் அடிமையாகக் கூடாது என்பதிலும் அக்கரை செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறர்கள்;

சமுதாயத் துறையிலே எதுவது நல்ல மாறுதல் நிகழும் போதெல்லாம் 'இந்து கலை சாரமும், மத உணர்ச்சியும் பாழ்பட்டுப் போகிறது' என்று ஓலமிடுகிறர். சொல்லுக்கு சொல் சுயஜாதியின்' வளர்ச்சி குறித்தும் எழுத்துக்கு எழுத்து ஆரிய மார்கத்தின் ஆக்கத்திற்கும்,நல் வாழ்விற்குமான கருத்துக்களை பரப்புகின்ற முயற்சியில் எழுதுகோலை திருப்பிவிடுகிறர்.

'அரசியல் தொண்டனுகவும் தேசப் பணியாளனுகவும் இருந்து. நாட்டு நலனுக்கான

★ தொடர்ச்சி 4-ம் பக்கம்

## தங்கத் தொட்டில்!

நியாயத்திற்காக வாதாடி இன்று கல்லறை குயிலாகி விட்ட கவிமணி அவர்கள்—ஆலயங்களை நோக்கி ஆண்டவனைத் தேடிப் புறப்பட்ட மனிதர்களைப் பார்த்து ஏ! மனிதர்களே!

கோயில் முழுதும் கண்டேன்
கோபுரம் ஏறிக் கண்டேன்
தேவாதி தேவனை யான்—எங்கு
தேடியும் கண்டிலனே—

என்று பாடினர். ஆனல் இன்றும் பண்டார வேடம் பூண்டு—பாதக நினைவுகளோடு நாட்டிலே உலவிக் கொண்டிருக்கும் கமண்டலமேந்திகளுக்கு தெளிவு பிறக்கக் காணேம்.

காவியுடையில், கள்ளனும் இருப்பான்—காமுகனும் புகுந்து கொண்டிருப்பான்—என்று நாம் கூறும்போது, புருவத்தை நெறித்துக் கொண்டு கண்டனம் எழுப்பும் பக்த கோடிகள் நம் கண் முன்னே தெரிகிறர்கள்.

ரத்தத்தை வியர்வையாக்கி, எலும்புகளை முறித்துக் கொடுத்து-வாழ்க்கையோடு ஓயாமல் போராடிக் கொண்டிருக்கும் திக்கற்றவர்களின், கண்ணீரைத் துடைக்க முன் வராமல்—அந்த கதியற்றவர்களின் கவலையைப் போக்க மார்கம் தேடாமல், முத்தையும்—பொன்னையும் உயிரற்ற 'கல்லுருண்டைகளின்' பேரால் வீணுக்கிவரும் கயமையை, அறிவுள்ளோர் அத்தனை பேரும் கண்டிக்கின்றனர்.

தங்கள் வயிற்றை நிரப்பிக் கொள்ள, 'சாமி'யின் பெயரை உச்சரித்துக் கொண்டு, சமுதாயத்தின் தொல்லைகளாக சுற்றித் திரியும் சன்யாசிகள், ஆயிரத்தெட்டு கேடுகளை வளர்க்கின்ற நச்சுப் புழுக்கள்—என்று நாம் கூறினல், 'ஓகோ! விடுகிறேனு பார்!' என்று வரிந்து கட்டுக் கொண்டு வாதாட வருபவர்கள் இருக்கிறர்கள். அவர்கள் வெட்கித் தலைகுனியும்படியான செய்தியொன்று நாளேடுகளில் வெளிவந்திருக்கிறது.

இந்தூரிலுள்ள மகேஸ்வரர் ஆலயத்திலிருந்து 45 பவுண்டு எடையுள்ள (ரூ. 1,90 000 மதிப்புள்ளது) தங்கத் தொட்டில் ஒன்று களவு போய் விட்டதாம்! இந்த திருட்டு நடைபெறுவதற்கு முதல் நாள் இரவு—சங்யாசி வேடத்தில் இருவர் வந்து ஆலயத்தில் தங்கியதாகவும், களவுக்குப் பின்னல் கம்பி நீட்டி விட்டதாகவும், செய்தி கூறுகிறது.

அந்த தங்கத் தொட்டில் 'ஆபத்பாந்தவனைப்' போட்டு 'ஆராரோ' பாடப் பயன்பட்டு வந்ததாம்! சங்யாசி கோலத்தோடு புகுந்த இந்த 'அனதை ரட்சகர்கள்' அய்யோ பாவமே! அதைத் தகர்த்தெரியவும் துணிந்திருக்கிறர்கள்.

# புயல் நிவாரணத்திற்கு
# ★ தி. மு. க வின் காணிக்கை ★

## டில்லி

புயல் நிவாரண நிதிக்காக வடநாட்டில் சுற்றுப்பயணம் செய்து வரும் தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள், டெல்லி மக்கள் சபை உறுப்பினரான தோழர் பேபி கந்தசாமியுடன், வெள்ள நிவாரணத்திற்காக நிதி திரட்டும் பணியில் ஈடுபட்டுள்ளார்—சென்ற கிழமையில் மட்டும் ரூ. 300-0-0 சேகரித்துள்ளார்.

## காட்டுப்பாடி (வ. ஆ.)

20-12-55 தி. மு. க. தோழர் கே. எம். நடராசன் அவர்கள் தோழர் கே. குப்புசாமி அவர்கள் தலைமையில் புயல் நிவாரண நிதிக்கென ரூ. 165-9-3 ம், இரண்டு மூட்டை அரிசியும், கேழ் வரகும் சேகரித்து செலவு போக மீதி ரூ 151-1-3 அறிஞர் அண்ணாவிடம் புயல் நிதிக்கென தந்துள்ளார்.

## சென்னை

சென்னை 14 வட்ட தி. மு. க கிளையினர் தங்கள் வட்டத்தில் ரூ 340-4-0 25ம், படி அரிசியும் 310 துணி உருப்படிகளும் திரட்டியுள்ளனர்.

## கோவில்பட்டி

19-12-55 ல் கோவில்பட்டி தி. மு. க தோழர்கள் டபிள்யூ டி. துரைசாமி, மு. அருணாசலம், ஜி. தேவராசன், நெல்லை. எல். நரசு, ஆவுடைநாயகம், ஆகியோரின் முயற்சியால் ரூ. 208-12-0 ம் பழைய துணிகளும் புயல் நிவாரணத்திற்கென சேகரித்துள்ளனர்.

## ஒண்டிப்புத்தூர்

17-12-55 ல் கோவை தாசில்தாரிடம் ஒண்டிப்புத்தூர் தி. மு. க. சார்பில் புயலால் பாதிக்கப்பட்டோர் நிவாரணத்திற்கென 2 மூட்டை அரிசியும், 19-12-55 ல் கோவை கலெக்டரிடம் ரூ 75 ம் ஒப்படைக்கப்பட்டது.

## சென்னை (13-வட்டம்)

சென்னை 13 வது வட்ட தி. மு. க. கிளையின் சார்பில் கிளைக் கழக உறுப்பினர்கள் 18-12-55 ல் தெருத்தெருவாக சென்று ரூ. 57-10-6 ம், 380 துணிகளும் 15 படி அரிசியும் வசூலித்து மாவட்டக் கழகத்தாரிடம் ஒப்படைத்தனர்.

## சென்னை (35-வது வட்டம்)

கோடம்பாக்கம் வட்ட கிளைக் கழகத் தோழர்கள் புயல் நிவாரணத்திற்கென ரூ 131-3-3 திரட்டினர்.

## சென்னை (1-வது வட்டம்)

14—12—55 தேதிகளில் தோழர் து. கோவிந்தசாமிதலைமையில் தி. மு. க. தோழர்கள் பல வீதி சென்று ரூ 31-12-6-ம் 82 பழைய உறுப்படிகளும் சேகரித்தனர்.

## சென்னை (43-வதுவட்டம்)

11—12—55 காலை 9 மணிக்கு கிளைக் கழகத் தோழர்கள் ஊர்வலமாகச்சென்று உண்டியல் மூலம் ரூ 81-9-0-ம் 98 பழைய துணிகளும் 21 படி அரிசியும் சேகரித்தனர்.

## சென்னை (12-வது வட்டம்)

சென்னை 12-வது வட்ட தி. மு. க வினர் தி. மு. க. சார்பில் 17-12-55 அன்று ரூ. 15 புயல் நிவாரணத்திற்கென்று வசூலித்தனர்.

## ஆலந்தூர்

14-12-55 ல் ஆலந்தூரில் அவ்வூர் தமிழகப் புயல் நிவாரணக் குழுவினர் ரூ. 101 திரட்டி, அரசியலாருக்கு அனுப்பி வைத்தனர்.

## சென்னை(40-வது வட்டம்)

தி. மு. க. தோழர்கள் சேப்பாக்கம் வட்டத்து மக்களிடமிருந்து ரூ 37-1-6-ம் 54 படி அரிசியும் 164 பழைய துணிகளும் புயல் நிவாரணத்திற்காக திரட்டியுள்ளனர்.

## சென்னை 31-வது வட்டம்

14—12—55-ல் இவ் வட்டத்திலுள்ள வீதிகள் தோறும் சென்று கழகத் தோழர்கள் 123-3-0-ம், 38 படி அரிசியும் 862 பழைய புதிய துணி உருப்படிகளும் திரட்டியுள்ளனர்.

## கோவை

நகர தி. மு. க. சார்பில் பொது மக்களிடத்தில் புயல் நிவாரணத்திற்கென ரூ 280-ம் ரூ 600 மதிப்புள்ள துணிகளையும் வசூலித்து கோவை கலெக்டரிடம் கொடுத்தனர்

## திருப்பூர்

11—12—55 காலை 8 மணி முதல், மாலை 6 மணிவரை தி மு க தோழர்கள் ஊர்வலமாகச் சென்று ரூ 106 ம் 50 துணி உருப்படிகளும் வசூலித்து தஞ்சை மாவட்ட கலெக்டருக்கு அனுப்பியுள்ளனர்.

---

# புயல் நிவாரண சிறப்பு கூட்டம்

1—1—56 மாலை 5-மணிக்கு சென்னை எழுப்பூர்—'டென்னிஸ்—ஸ்டேடியத்தில்' (எழும்பூர் இரயிலடிக்கு அருகில்) நடைபெறும்.

**அண்ணா**
**நெடுஞ்செழியன்**
**கருணாநிதி**

ஆகியோர் பேசுவார்கள்.

குறிப்பு : பயன் படக்கூடிய துணி ஒன்று தருவோரே அனுமதிக்கப்படுவர்.

—சென்னை மாவட்ட தி. மு. க.

---

## கருப்பு நிலா!...

★ 5-ம் பக்கத் தொடர்ச்சி

காலம் உறங்கி உறங்கி விழித்துக் கொண்டிருந்தது!

இந்திரா...! இந்த நான்கு எழுத்துக்களில் குமரவேலன் தன் இதயத்தைப் பறிகொடுத்தான்.

இந்திராவின் நெஞ்சமோ 'குமரன் வரக் கூவுவாய்' என்று ஓயாமல் கீதம் இசைத்துக் கொண்டிருந்தது.

பிரிக்க முடியாத அளவிற்கு தன் மகளின் இதயத்திலே ஒருவன் புகுந்துவிட்டான் என்பதை அறிந்த இந்திராவின் தந்தை கொஞ்சம் பெருந்தன்மையோடு நடந்துகொண்ட செய்தியை நாம் இங்கே குறப்பிட வேண்டுமல்லவா?

ஆம்! தன் மகளை குமரவேலனின் குடும்ப விளக்காக்கிவிட்டார்.

★

'அந்தஸ்து மாளிகையடா தம்பி! அதன் நிழலிலேகூட நம்மால் ஒதுங்க முடியாது. அந்த ஆசையை மட்டும் மறந்துவிடு'—என்று குமரவேலனிடம் அடிக்கடி கூறி வந்த அவன் தாய்க்கு, இந்தத் திருமணம் அளவிட முடியாத ஆச்சரியமாக இருந்தது. விழி நிறைந்த குணவதி தன் மகனுக்கு வழிகாட்டியாகவும், தனக்கு மருமகளாகவும் கிடைத்துவிட்ட சந்தோஷத்தை அவளால் கட்டுக்குக் கொண்டுவர முடியவில்லை. குமரவேலனைப் பெற்றதைவிட, அவனுக்கு கிடைத்த 'குடும்ப விளக்கை' பெரிய பாக்கியமாக கருதி மகிழ்ந்தாள் அவன் தாய்.

குமரவேலனே — இந்திராவை தன் சேவைக்குக் கிடைத்த பெரும் பரிசாக கருதினான். தாயகத்தின் விடுதலையிலே தணியாத தாகம் கொண்ட குமரவேலன் இந்திராவின் கூட்டுறவால் புது உற்சாகம் பெற்றான்; புகையும் எரிமலையென புரட்சிக் கருத்துக்களை வாரி வீசினான். அவன் ஏறாத மேடைகளில்லை — அவன் நுழையாத பட்டிதொட்டிகள் கிடையாது; அவன் எழுப்பிய போர்க் குரலைக் கேட்டு எத்தனையோ கோழைகள் களத்திலே குதிக்கவும் தயாராக இருந்தனர். அறிவுப் படையில் அவன் ஓர் பிரசார பீரங்கி—புரட்சி எழுத்தாளன்—புதுமை இலக்கியங்களை முத்தாரமாக்கி மாணவர் சமுதாயத்திற்கு காணிக்கையாக்கும் சொல்லோவியன்—என்ற புகழாரத்திற்கு தலை வணங்கினான்.

தன் இதயத்திலே குடியேறியவன் தாயகத்தோரின் நெஞ்சங்களில் சதிராடும் சீர்திருத்தச் செம்மல், என்ற செய்தியை நினைத்து நினைந்து மகிழ்ந்து கொண்டிருந்தாள் இந்திரா.

ஓராண்டு நகர்ந்து விட்டது!

குமரவேலனின் ஓயாத உழைப்பும்—சலியாத தொண்டும்-அவன் உடல் நலத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக தின்று கொண்டு வந்தது. அதே நேரத்தில் ஏகாதிபத்திய வெறியர்களின் கழுகுப் பார்வையும்—அந்த கொள்கை வீரனை நோக்கித் திரும்பிற்று.

தமிழகத்திலே கொந்தளிப்பு அலைகளை உண்டாக்கிய விழிப்புணர்ச்சி—தன் மான எழுச்சி—தாயகத்திலே தகாதவர்களின் ஆதிக்கம் இருக்கக்கூடாது என்ற அடிப்படையிலெகிளம்பிய புரட்சி ஜுவாலை, குமரவேலனை கொலைக் களத்திலே கொண்டுபோய் நிறுத்திற்று. இதயத்தைக் கருப்பாக்கிக் கொண்ட ஆட்சியாளர்கள், குமரவேலனை காராக்கிரகத்திலே தள்ளி மூடினர்.

களம் சென்ற காதலன் காவலறையிலே மூடப்பட்ட செய்தி கேட்டு இந்திராவின் தலை சுற்றியது. கோவெனக் கதறியபடியே தலையணையில் முகம் புதைத்து அரற்றினாள்.

'அய்யோ மகனே!' என்று அடிவயிற்றை கைகளால் பிசைந்து கொண்டு குமுறி நின்றாள் அவனைப் பெற்றவள்!

★

ஆறு மாதங்களுக்குப் பிறகு ஒருநாள் 'குமரவேலனுக்கு விடுதலை' என்ற செய்தி ஊரெங்கும் பரவிற்று. நினைத்தால் அந்த சிறைச்சாலையை 'பாஸ்டி லி'யாக்கிவிட்டிருக்க முடியும், அவ்வளவு ஜனக்கூட்டம் அந்த விடுதலை வீரனை வரவேற்க சிறைகூடத்தின் கதவோரத்தில் குவிந்திருந்தது.

சத்தெடுக்கப்பட்ட சக்கை போல் குமரவேலனை தோழர்கள் வீட்டிற்கு கொண்டுவந்துவிட்டு—விடைபெற்றுச் சென்றார்கள்; இந்திரா குமரவேலனைக் கண்டதும் மெய்மறந்து நின்றாள். அவள் கண்களில் கண்ணீர்பெருக்கெடுத்தது. மகிழ்ச்சிப் பெருக்கால் காதலனை ஆரத்தழுவி மகிழ்ந்தாள்.

குமரவேலன் அவள் நிலாமுகத்தை அன்போடு கைகளால் அணைத்து, அவள் கண்ணீரைத் துடைத்துவிட்டான். அப்போது அவன் கைகளில் ஏற்பட்ட நடுக்கத்தை இந்திரா உணர்ந்துகொண்டாள்.

பீரிட்டு வந்த துக்கத்தை அவளால் அடக்க முடியவில்லை; 'உங்கள் உடம்பு ஏன் இப்படி நடுங்குகிறது' என்றுகூறி வாய்விட்டு அழுதாள் இந்திரா.

ஊருக்கு உழைக்கப் போனாயே மகனே! உலர்ந்துபோன சருகாகி விட்டாயே! அய்யோ குமரா—என் வயிற்றிலே தணல் பற்றி எரிகிறதே'—என்று கண்ணீர் விட்டாள் அவன் தாய்.

'அம்மா—லட்சியவாதிகளின் பாதையிலே—இதெல்லாம் மிக மிகச் சாதாரணம்; இதற்காக ஏன் கவலைப்படுகிறீர்கள். இன்னும் சில தினங்களில் குணமடைந்து விடுவேனம்மா—கண்ணீரைத் துடைத்துக் கொள்ளுங்கள், நீங்கள் அழுவதைப் பார்த்து இந்திராவும் கண்ணீர் விடுகிறாள், இந்த நேரத்தில் அவள் கவலைபடலாமா? என்னைப் பற்றி கவலை வேண்டாம் அவளை கவனித்துக் கொள்ளுங்களம்மா' என்று கூறினான் குமரவேலன்.

★

அன்றைக்கு பத்தாவது நாள்: இந்திரா குமரவேலனின் மற்றொரு பதிப்பை குழந்தை வடிவிலே பெற்றெடுத்தாள்! அந்த குழவியின் கொவ்வைச் செவ்வாயிலிருந்து வந்த 'குவா-குவா' என்ற குழலொலியை படுக்கையிலிருந்தபடியே கேட்டான் குமரவேலன். அவன் காய்ந்து போன உதடுகளிலே ஒரு வரண்ட புன்னகை மிதந்தது.

'அம்மா என் செல்வனைத் தூக்கி வா!' ஆசையனைத்தையும் உதட்டிலே தேக்கி குமரவேலன் தன் தாயிடம் கூறினான். அதற்குமேல் அவனால் பேச முடியவில்லை. அவன் தாய் அந்த 'தங்க விக்ரகத்தை' உயிர் வற்றிப்போன குமரவேலனுக்கு முன்பாக கொண்டுவந்து நீட்டினாள். அதைப் பார்த்து சுவற்றிலிருந்த 'புருனோ'வின் உருவம் லேசாக சிரித்தது.

இந்திரா......இனிமேல் அவள் ஒரு கருப்பு நிலா...சமுதாயம் அப்படித்தான் சொல்லுகிறது! *

# பிறை வானம்



...பிள்ளைகள் பகுதி...

# அன்புப் பரிசு!

[ சிறுகதை ]

“ஏண்டி அல்லி, வீட்டுக்குள்ளேயே அடை பட்டுக் கிடக்கிறாய்? ஐயோ, சிறைப் பறவையே! மாடி வீட்டு ஆசிரியரை வெளியூருக்கு மாற்றி விட்டார்களாம். இன்று ஊருக்குப் போகிறார், தெரியுமா? நான் அவர் வீட்டுக்குத்தான் போறேன்; நீ வர்றியா?” என்று கேட்டாள் பக்கத்து வீட்டுப் பெண் பத்மா.

அல்லி வாயைத் திறக்கவில்லை. ஆனால் தலையை மட்டும் அசைத்தாள், “நான் வரவில்லை நீ போ!” என்பதற்கு அடையாளமாக.

பத்மா போய் விட்டாள். பத்மா மட்டுமல்ல; பூப் பறிக்கக் கூப்பிட்ட பூமா—‘காரம் போர்டு’ விளையாட அழைத்த கமலா—எல்லோருமே தோல்வியுடன் திரும்பிப் போனார்கள். ஆனால், அல்லியோ நின்ற இடத்திலேயே ‘தொப்’பென்று உட்கார்ந்து விட்டாள். அவளது சோர்வுக்கு — சோகத்துக்குக் காரணம்தான் என்ன?

“ஏம்மா இப்படி கன்னத்தில் கையை வச்சிக்கிட்டு உட்கார்ந்துட்டே! ‘கிரவுண்ட்’ பக்கம் போய் விளையாடிட்டு வர்ரது தானே!” என்று அம்மா அன்புக் கட்டளையிட்டாள் செல்லமாக. ஆனால், அல்லி அசையவில்லை. வெளியே செல்லும் நிலையிலா அவள் இருக்கிறாள்! பாவம், அவள் உள்ளத்தில் புகுந்து வேதனை செய்யும் விஷயத்தை அம்மா அறிவாளா? அல்லது பள்ளிக்கூடத் தோழிகள்தான் உணர்வார்களா?

“மாடி வீட்டு ஆசிரியர் இன்று ஊருக்குப் போகிறார், தெரியுமா!” —பத்மா சொல்லி விட்டுப் போன அந்தச் செய்தி...அல்லியின் கண்கள் கலங்கிவிட்டன. ‘குபுக்’கென்று எழுந்து உள்ளே ஓடினாள். அவசர அவசரமாகத் தன் புத்தகப் பெட்டியைத் திறந்தாள். அடியிலே கையை விட்டுத் தேடினாள். வெளியே எடுத்தாள். கையிலே ஒரு அழகான பார்க்கர் பேனா! அதை விழுங்கி விடுவதைப் போலப் பார்த்தாள் அல்லி! “அடி பைத்தியக்காரி! என்ன இப்படிப் பார்க்கிறாய்? பேனாதான்! ஆனால் உனது பாழும் நெஞ்சிலே பிறந்த குருட்டு எண்ணத்திலே சிக்கிவிட்ட திருட்டுப் பொருள். ஆகவே தொடாதே! தொடாதே! நீ திருடி—தொடவே தொடாதே!” — என்று பேனா பேசவில்லை. ஆனால் அல்லியின் மனச்சாட்சி பேசியது.

அல்லி பேனாவை பெட்டிக்குள்ளேயே போட்டாள். பெட்டியை மூடினாள். ஆனால் மனதில் எழும்பிய வேதனையைப் பூட்ட முடியுமா? ஆயிரமாயிரம் கற்பாறைகளை அடுக்கினாலும் அணை உடைத்துப் பாயும் பயங்கர வெள்ளம் போன்றதல்லவா எண்ணங்கள்!

அல்லியின் நினைவுகள் பறந்தன. அவள் ‘திருட்டு’த்தனமான கதை......அப்பப்பா! அவள் செய்துவிட்ட செயல்தான் எத்தகையது?

அல்லியின் பள்ளிக்கு புதிதாக வந்தார் அந்த ஆசிரியர். அல்லியின் வகுப்புக்கு அவர் வருவதில்லை! ஆனால் அல்லியின் வீடிருந்த தெருவிலேயே ஒரு மாடி வீட்டில் குடிவந்தார். நல்லவர்—மிக மிக நல்லவர். குழந்தை மனம் படைத்தவர். அந்தத் தெருவிலேயிருந்த பள்ளிச் சிறுவர், சிறுமியர் அனைவருக்கும் அவர் ‘இலவச வீட்டு வாத்தியார்’ ஆகிவிட்டார். அதிலும், குறும்புப் பெண் அல்லியிடம் அவருக்கு அலாதிப் பிரியம்! சந்தேகம் என்று சென்றால், அன்புடன் சொல்லிக் கொடுப்பார். ஆனால்... அவர் செய்த அந்த உதவிக்கு அல்லி அளித்த கைமாறு?......

அன்றும் அப்படித்தான் போனாள் அல்லி. ஆசிரியர் அன்போடு அழைத்தார். “என்ன அல்லிப் பாப்பா! என்ன புத்தகம் கையிலே? சந்தேகம் தமிழிலா? ஆங்கிலத்திலா?” என்றார் சிரித்துக் கொண்டே.

“இரண்டிலுமில்லை சார்; இன்னும் புரியாத இந்தியில் கூட இல்லை! கணக்கில்தான் சார்!” என்றாள் அல்லி.

சந்தேகத்தைச் சொன்னாள். ஆசிரியர் சொல்லிக் கொடுத்தார். புரிந்து கொண்டாள் அல்லி. தானும் ஒரு முறை கணக்கு ‘நோட்’டில் எழுதிக் கொள்ள ஆசிரியரிடமிருந்து பேனாவை வாங்கினாள். எழுதினாள். வீட்டுக்கும் திரும்பினாள்.

ஆனால், வீட்டுக்கு வந்த பிறகுதான் அவள் திடுக்கிட்டுப் போனாள். ஏன் தெரியுமா? அவளையும் அறியாமல், அவள் கையிலிருந்த கணக்குப் புத்தகத்திலேயே இருந்தது ஆசிரியரின் பார்க்கர் பேனா! தெரியாமல் நடந்து விட்ட தவறு இது! அல்லி உடனே ஆசிரியரின் வீட்டுக்குப் போகத் திரும்பினாள். ஆனால் ஏனோ நின்று விட்டாள். எங்கிருந்தோ அவள் மனதில்...... ஏதோ ஒரு எண்ணம்......ஏனோ வந்து புகுந்தது.........அவள் அந்தப் பேனாவைப் பார்த்தாள். அழகான நிறம்; பளபளக்கும் தங்க மூடி! அவள் கண்கள் வியப்பால் விரிந்தன. மறுகணம் வியப்போடு ஆசையும் கலந்தது. பைத்தியக்காரி, நெஞ்சத்திலே பேராசைக்கு இடம் கொடுத்து விட்டாள்! அவ்வளவுதான்; மறுகணம் பேனாவைப் பெட்டிக்குள் வைத்து விட்டாள்; ‘டபார்’ என்று பெட்டியை மூடினாள்! அல்லி கள்ளியானாள்!

மறுநாள் முதல் அவள் ஆசிரியரின் வீட்டுக்கே போகவில்லை. எப்படிப் போவாள்! போக இடம் கொடுக்குமா மனம்? வீட்டுக்கு மட்டுமல்ல; அவள் தெருவிலேயே இறங்கப் பயந்தாள். தோழிகள் வந்தால் சிரித்துப் பேசுவதில்லை; சீறி விழுந்தாள்! விளையாட அழைப்பார்கள்—‘மாட்டேன்’ என்று மறுத்து விடுவாள். அவள் மற்றவர்களுடன் பேச பயந்தாள்; பழக வெட்கினாள்; ஏன், அவர்களின் முகத்தை ஏறிட்டுப் பார்க்கவே அஞ்சினாள்! பாவம், அவள், தான் ஒரு தனிப் பெண்—மற்றவர்களைவிட மிகமிகக் கீழானவள் என்று எண்ணினாள்.

“அல்லி பொல்லாதவளாகி விட்டாளே! ஆறாவது வகுப்பு படிக்கு போதே இத்தனை ஆட்டமென்றால்... அப்பப்பா! ......இன்னும் போகப்போக என்னவாகுமோ......?” என்று கேலி பேசினார்கள் பள்ளிச் சிறுமிகள்!

ஆனால் அல்லியோ......ஆசிரியர் வீட்டுக்குப் போய் பேனாவைக் கொடுத்து விட்டால் என்ன — என்று நினைப்பாள் சில சமயம்! ஆனால் எங்கிருந்தோ வந்து தடுத்துவிடும், பாழும் பயம்! தன்னைப்போன்ற சிறுமிகள் தெருவில் விளையாடுவதைக் கண்டு வருந்தினாள். ஆசிரியரின் வீட்டுக்குச் சிரித்துக்கொண்டே செல்லும் சிறுவர் சிறுமிகளை—அவர்களது மகிழ்ச்சியைப் பார்த்துப் பார்த்து விம்மினாள்; தனியாக உட்கார்ந்து கண்ணீர் விட்டாள்! ஆனால் ஆசிரியரின் பேனா திறக்கப் படாமலேயே பெட்டியுள் கிடந்தது!

ஒரு மாதம்!...இந்தச் சித்திரவதையை இனியும் அல்லியால் தாங்க முடியுமா? அதுவும் இன்று புதிய—ஆறுதல் பயன் போன்ற செய்தி கிடைத்த பிறகு! ஆசிரியர் திடீரென்று மாறுதலாகி விட்டார்; வெளியூர் போகப் போகிறார்! அல்லியால் தாங்க முடியவில்லை. வாசலுக்கு ஓடிவந்தாள். மாடி வீட்டை நோக்கினாள்: வாசலில் ஒரு கார் நின்றது. அவரது சாமான்கள் காரில் ஏற்றப் பட்டுக் கொண்டிருந்தன. அந்தப் பெரிய காரியத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவர்கள் சிறுவர், சிறுமிகள் தான்! தமது பிஞ்சுக் கைகளால் சாமான்களை சிரமப்பட்டுத் தூக்கும் குழந்தைகளைக் கண்டு ஆசிரியர் சிரித்துக் கொண்டே நின்றார். ஒரு சிறுவன் தூக்க முடியாமல் தூக்கிக் கொண்டு வந்தான் கூஜா ஒன்றை! மிகவும் சிரமப் பட்டான்; எனினும் அந்தச் சிரமத்தை மறைத்துக் கொண்டு முகத்திலே சிரிப்பு! ஆனால் திடீரென்று கூஜா கீழே விழுந்து விட்டது; உருண்டு ஓடியது. அதைக் கண்டு ஆசிரியர் கோபப் பட்டார் என்று நினைக்கிறீர்கள்? இல்லை—பலமாக வாய்விட்டுச் சிரித்தார்; எல்லோரும் சிரித்தார்கள்; கடைசியில் அந்தப் பொடியனும் சிரித்து விட்டான். மறுபடியும் சளைக்க வில்லை; கூஜாவைத் தூக்க ஓடினான்.

இவை அனைத்தையும் பார்த்தாள் அல்லி. எப்படி இருக்கும் அவளுக்கு? மனம் புழுங்கினாள். ஆசிரியரின் அந்தச் சிரிப்பு, ‘சிங்கக் குழந்தைகளே! நீங்கள் அத்தனை பேரும் தங்கமானவர்கள்! ஆனால் அந்த அல்லியோ — பொல்லாதவள்! ரொம்ப ரொம்பப் பொல்லாதவள்!” என்று சொல்வதைப் போல இருந்தது அவளுக்கு.

அல்லியால் சகிக்க முடியவில்லை. என்னவோ நினைத்தாள். வீட்டுக்குள் மீண்டும் ஓடினாள். பெட்டியைத் திறந்தாள். பேனாவை எடுத்தாள். என்னவோ எழுதினாள். மன்னிப்புக் கடிதம்! ஆமாம்; அவள் ஆசிரியரின் வீட்டுக்குப் போக முடிவு செய்து விட்டாள். ஆனால் தனது முட்டாள்தனத்தை—முன் யோசனை இல்லாத முழு மூடச் செய்கையை நேரில் சொல்ல மீண்டும் பயந்தாள். ஆகவேதான் எழுதினாள்; அவள் சார்பாக எழுத்துக்கள் பேசட்டுமே என்று!

எழுதி முடித்தாள். பேனாவையும் எடுத்துக் கொண்டாள். தெருவில் இறங்கினாள். மாடி வீட்டை நோக்கி ஓடினாள். அப்போதுதான் ஆசிரியர் காரில் ஏறிக் கொண்டிருந்தார். பக்கத்தில் சூழ்ந்து கொண்டு நின்றது ஒரு ‘பிள்ளைப் பட்டாளம்!’

அல்லி ஓடினாள்; அங்கே கார் புறப்படத் தயாரானது!

தவறுக்கு மன்னிப்பு கேட்க அந்தத் திருந்திய தங்கை தலை தெறிக்கஓடினாள்; அங்கே ஆசிரி

★ தொடர்ச்சி 12-ம் பக்கம்

# 'எழுத்தாணி'

இந்த வாரம் பரிசு பெறும்
தோழியர்:
(●) கே. சுசீலா.
மாசிலாமணி முதலியார் தெரு,
வேலூர்

**த. மாசிலாமணி; சென்னை-1.**

(?) திராவிடத்தின் மிக நுண்ணிய பொருள் எது?

மானம்!

**ஏ. எஸ். கனி; திருத்தங்கல்.**

(?) மனிதன் குரங்காக மாறுவது எப்போது?

புகழ் மரத்தின் உச்சாணிக் கொம்பில் ஏறிக் கொண்டபோது!

**எஸ். சகுந்தலா; புரசை.**

(?) தன் மார்பிலே சொருகியிருந்த ரோஜா மொக்கு ஒரு குழந்தையிடம் சென்று விட்டபோது அதை நேரு திரும்பவும் பிடுங்கிக்கொண்டாராம்; இது எதைக் காட்டுகிறது?

வியாபாரிகளுக்கு 'டிரேட் மார்க்' தானே முக்கியம்!

**சு. சொக்கலிங்கம்; சென்னை-12.**

(?) அரசியலில் 'அழுகிப் போன பழம்' யார்?

உதிர்ப்பதற்குத் தகுந்த விதையேதும் இல்லாமல் வாடிக் கொண்டிருக்கும் மாம்பலத்து வேதாந்திதான்!

**ம. குருச்சந்திரன்; திருகோணமலை**

(?) தலை தள்ளாத வாழையை எதற்கு ஒப்பிடலாம்?

வரிசு இல்லாத நேருவிற்கு!

**சி. ராமநாதன்; பொன்மலை.**

(?) நம் நாட்டில் எந்தத் தொழில் மூலம் பெருவாரியான மக்கள் வாழ்க்கை நடத்துகின்றனர்?

காங்கிரஸ் போர்வையில் பதவி தேடுவது; கள்ளச் சாராயம் காய்ச்சுவது—இவை இரண்டிலும்தான்!

(?) இந்தியாவிலேயே பெரிய தொழிற்சாலை எது?

பயனற்ற வார்த்தைகளை அதிவேகத்துடன் தயாரித்துக் கொண்டிருக்கும் நேருவின் வாய்தான்!

**ந. ராமலிங்கன்; கல்லடிக்குட்டை.**

(?) உலகம் எதன் முனையில் சுழல்கிறது? ஏர் முனையிலா?

இல்லை; வல்லரசு நாடுகளின் வாய் ஜாலத்தில்தான்!

**எஸ். இராமச்சந்திரன்; ஆற்காடு.**

(?) தமிழ் நாட்டில் எது அதிகமாக உற்பத்தியாகிறது?

கடவுள்தான்; சாணிக்கு பொட்டு வையுங்கள்—இங்கு அது கூடக் கடவுளாகிவிடும்!

**(●) கே. சுசீலா; வேலூர்.**

(?) நல்ல காலம்; கெட்ட காலம்—இவைகளை நம்புகிறீர்களா?

நம்பமாட்டேன் சகோதரி! என்னுடைய ஸ்விட்சர்லந்து கடிகாரம் 'இந்து மதம்' குறிப்பிடுகிற இந்தக் காலங்களையெல்லாம் காட்டுவதில்லை!

★


**பொங்கல் வாழ்த்துக்கள்.**

தி. மு. க. தலைவர்கள். அவர்களது கைப்பட எழுதிய வாழ்த்துரைகள் அப்படியே பிளாக் செய்யப்பட்டு வண்ணச் சித்திரங்களோடு வெளியிடப்பட்டுள்ளன.

இரு வண்ணக் கவருடன்
தனி வாழ்த்து
விலை அணா 4.

முகவரி
தமிழ் நூல் கழகம்,
2, மெம்மோரியல் ஹால் தெரு.
சென்னை 3


## பிறைவானம்...

★ 11-ம் பக்கத் தொடர்ச்சி

யரைக் கையை ஆட்டி விடை அனுப்பினார்கள் சிறுவர்களும், சிறுமிகளும்!

கடைசியில் கார் புறப்பட்டது; எதிரே ஓடிவந்து நின்றாள் அல்லி. கார் நின்றது; அல்லி திடுக்கிட்டுப் போனாள். ஆசிரியர் அழுது கொண்டிருந்தார்! குழந்தைகளைப் பிரிகிறோமே என்று அவருக்கு அத்தனை துக்கம்—ஏக்கம்!

அவர் கண்களைத் துடைத்துக் கொண்டார். "என்ன அல்லி பாப்பா! எங்கே வந்தே? என்னை வழியனுப்ப வைக்க வா?" என்றார். கோபமாக அல்ல; அந்தப் பழைய பண்புடன்—அன்புடன்.

அல்லியின் கண்கள் கலங்கின; வாயைத் திறக்கவில்லை அவள். நடுங்கும் கைகளுடன் தேனையும் மன்னிப்புக் கடிதத்தையும் நீட்டினாள்.

ஆனால், அதை வாங்கவில்லை ஆசிரியர். "ஓ!...தேனா? எனக்கு வேண்டாம் பாப்பா! அது உனக்குத்தான்! நான் உங்களை எல்லாம் பிரிகிறேன்—இனி எப்போது பார்க்கப் போகிறேனோ—ஆகவே இது உனக்கு எனது அன்பளிப்பு! ஞாபகச் சின்னம்!" என்றார்.

அல்லிக்கு வாய்விட்டுக் கதற வேண்டும் போல் இருந்தது. கார் நகர்ந்தது. புழுதியைக் கிளப்பிக் கொண்டு சென்றது. ஆசிரியர் வெளியே கையை நீட்டி ஆட்டினார். அல்லியின் கைகள், தானே மேலே எழும்பின. அசைந்தாடின. கையிலே இருந்த மன்னிப்புக் கடிதமும் காற்றிலே பறந்து ஓடியது! ஆனால் ஆசிரியரின் அன்பளிப்பான டார்க்கர் தேன் அவளிடமே அன்று முதல் இன்று வரை இருக்கிறது!

— சொர்ணம்

★


**'முரசொலி'**

இலங்கைத் தோழர்களுக்கு:

| | |
|---|---|
| ஆண்டு சந்தா | 6-0-0 |
| 6-மாத சந்தா | 3-8-0 |

இலங்கை நேயர்களிடமிருந்து வி. பி. பி. மூலம் சந்தா தொகை பெற்றுக் கொள்ள இயலும்.

வெளிநாடு

| | |
|---|---|
| ஆண்டு சந்தா | 7-0-0 |
| ஆறுமாத சந்தா | 4-0-0 |

மலேயா நேயர்கள், சந்தா தொகைக்கு 'கிராஸ்' செய்த பிரிட்டிஷ் போஸ்ட்டல் ஆர்டர்கள் அனுப்ப வேண்டுகிறோம்.

மூன்று மாத சந்தா கிடையாது.



**பொங்கலன்று வருகிறது!**

திரையுலகச் செய்திகளைத் தேன் சுவையுடன் அள்ளி அள்ளிக் கொடுக்கும்

**வெள்ளிவீதி**

கண்ணில் படும் இடங்களிலெல்லாம் படங்கள் பல கொண்டு, பரவசத்திலாழ்த்தும் பட உலக

**மாதம் மும்முறைப் பத்திரிகை!**

விலை 2 அணா

———: எங்கும் ஏஜெண்டுகள் தேவை :———

நிர்வாகி, "வெள்ளிவீதி"
92, சர்-தியாகராயா ரோடு, தி. நகர், சென்னை-17.



எல்லா ஊர்களிலும் ஏஜண்டுகள் தேவை

நாட்கள் மறைந்தாலும் நறுமணம் மாறாத தன்மையுள்ள
**ஸ்ரீகிருஷ்ணா பன்னீர்**
ரோஸ்வாட்டர்--ஓமவாட்டர்--வினிகர்
கட்டோப்புளிப்பு....சோம்புவாட்டர்
ரோஸ்வாட்டர்--ரோஸ்குல்கந்து
118, PORTUGUESE CHURCH ST. MADRAS-1

கிடைக்கும்


ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும் மு. கருணாநிதி, 'முரசொலி' அச்சகம், 4/128, மவுண்ட்ரோடு, சென்னை.